# அறிவுக்கதிர்


ARIVUKKATHIR

அறிவியல் சஞ்சிகை

*Magazine of Science*









விஞ்ஞானம்
உளவியல்
இயற்கை
கல்வி
யோகா
ஆங்கிலம்
தகவல் தொழில்நுட்பம்
வேறும் பல

2004 மலர் - 01 இதழ் - 02

அறிவுக்கதிர்
ARIVUKKATHIR
அறிவியல் சஞ்சிகை Magazine of Science

## உள்ளே.....

**கல்வி**

புதிய கல்வி .......................... 06
சாதனையாளனுக்கு தங்கம் புலமைப் பரிசில்....................... 05
ஆய்வுக்கட்டுரைப் போட்டி..... 19

**விஞ்ஞானம்**

பிரபஞ்சத்தில்.......................... 37

**ஆரோக்கியம்**

யோகா................................... 43
சிரிப்பு.................................... 03

**தகவல் தொழிநுட்பம்**

புதியவர்களுக்கு..................... 10

**இயற்கை**

தேனீக்கள்............................ 39

**பிரதான கட்டுரை**

சாதனையாளர் வரிசையில்.......24

**ஏனையவை**

கட்டுரைகோருதல்..................23
குப்பை...................................21
பின்அட்டை விளக்கம்............51
உளவியல் எண்ணங்களே.........................47

**ஆங்கிலம்(English)**

*English to the....................12*
*Genius............................13*
*Plate of Gold.................15*
*Wealth.............................17*

''அறிவுக்கதிர்'' சஞ்சிகையின்
கட்டமைப்புக் குழு

முல்லைத்தீவு மாவட்டம்

போசகர்கள்:
திரு.சி.சுந்தரன் – அரச அதிபர் (முன்னாள்)
திருமதி.சு.இமெல்டா – அரச அதிபர்
வண.பிதா.ஜி.எ.பிரான்சிஸ் ஜோசெப்

உப போசகர்:
திரு.செ.தயானந்தா – பிரதேசசெயலர் புதுக்குடியிருப்பு

ஆலோசகர்கள்:
திரு.பெ.க.சிவலிங்கம் – அதிபர்
திரு.ச.ராதேயன்
திரு.காங்கேயதிருமலைவன்னியான்

தலைவர்:
திரு.த.குருகுலராசா – வலயக்கல்விப் பணிப்பாளர்.

செயலாளர் / ஆசிரியர்
திரு.இணுவையூர்சிதம்பரதிருச்செந்திநாதன்

பொருளாளர்
க.சரவணபவன் (பி.க.ப)

இணைப்பாசிரியர்:
திரு.வீ. சகாதேவன்

நிர்வாசபை உறுப்பினர்கள்:
திருமதி.மை.ஜீவராணி புனிதா, ஆசிரியர்
திரு.க.சரவணபவன், பி.க.ப,
திரு.செ.செல்வராசா, உ.க.ப,
திரு.ஐ.கே.தவரட்ணம், உ.க.ப,

சித்திரக்லைஞர்கள்:
திரு.சு.ராஜன்
திரு.ந.கோணேஸ்வரன்

கணினி தட்டச்சும் வடிவமைப்பும்:
ரெயின்போ மினிலாப், 361எ, நீதிமன்ற வீதி
திருக்கோணமலை.

அறிவுக்கதிர்
அன்பும் வீரமும் அறிவும் ஓங்குக
ARIVUKKATHIR
அறிவியல் சஞ்சிகை Magazine of Science

## அன்பார்ந்த வாசர்கர்களே!

### சாதனையாளர் வரிசையில்.........................

எமது முதலாவது இதழில் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நெல் உற்பத்தியில் சாதனை படைத்து கௌரவிக்கப்பட்ட வவுனியா நெடுங்கேணியை பிறப்பிடமாகக் கொண்ட திரு.க.முத்துக்குமார் பற்றிய பிரதான கட்டுரை பிரசுரிக்கப் பட்டது.

இந்த இதழில் பேராசிரியரும் யாழ்துணை வேந்தருமாய் இருந்த திரு. அ. துரைராசா பற்றிய பிரதம கட்டுரை இடம் பெறுகின்றது.

முன்னையவர் ஒரு விவசாயி, பின்னையவர் ஒரு அறிவியல் மேதை; ஆனால் இருவரும் சாதனையாளர்கள்.

எமது சஞ்சிகையின் மகுட வாக்கியம் ''அன்பும் அறிவும் வீரமும் ஓங்குக'' என்பதாகும். இவ்வாக்கியத்தின் மூலம் சமூகத்திற்கு மிக முக்கியமான, கருத்தாழம் நிறைந்த செய்தியை சுருக்கமாக எடுத்தியம்பியுள்ளோம்.

இவ்விடத்தில் எமது மகுடவாக்கியத்திற்கு சிறுவிளக்கம் கொடுப்பது அவசியமாகின்றது.

நோய்வாய்ப்பட்டோ அல்லது ஊனமுற்றோ, அல்லது போதிய (கல்வி) அறிவு இன்றியோ, அல்லது ஏழ்மை நிலையிலோ, அல்லது இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றால் பீடிக்கப்பட்டோ இவ்வுலகில் பலகோடி மக்கள் அல்லல் படுகின்றனர். இவர்களுடைய துன்பத்தைப் போக்க தலைவர்களோ, மதப் பெரியார்களோ, தொண்டர்களோ, அமைப்புக்களோ, நாடுகளோ அல்லது சர்வதேச அமைப்புக்களோ, முன்வர வேண்டும். அவ்வாறு செயற்படுவதற்கு அடிப்படையில் தனி மனிதர்களுக்கு அன்பு, அறிவு, வீரம், செயற்திறனும், நன்னெறி, தியாக சிந்தை போன்ற பல முக்கிய விடயங்களில் பல்துறை சார்ந்த அறிவும் ஊட்டப்பட வேண்டும். ஊட்டிய அறிவுக்கு செயலுருவம் கொடுக்கும் வீரதியாகிகளை உருவாக்கவும் வேண்டும்.

இந்தப் பணியில் எம்மால் முடிந்த சேவையை வழங்குவதே எமது சஞ்சிகையின் பிரதம குறிகோளாகும்.

சாதனையாளர்களுக்கு சிறப்பிடம் கொடுப்பதும் இதற்காகவே. எமது மூதாதையரின் வீரதீரச் செயல்கள், நன் நெறிகள், அரும் பெரும் தியாகங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே நாம்

எமது தற்கால வாழ்வை நிலை நிறுத்திக் கொள்ளவும் மேம்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்கின்றோம். அதுவே எமது ஆதார சக்தி. எனவேதான் உங்களுக்குத் தெரிந்த சாதனையாளர்கள் பற்றி உங்களுக்கு தெரிந்த விடயங்களையும், அவர்கள் பற்றி மேலும் அறிய தொடர்பு கொள்ள வேண்டியவர்களுடைய பெயர் முகவரி, தொலைபேசி இலக்கம், ஈமெயில் (Email) விபரம் போன்றவற்றையும், சமூகத்தின் நலன் கருதி தந்துதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது சஞ்சிகை அறிவியல் விடயங்களை தாங்கி வருகின்றது. எனவே சாதனை என்பது மனித வாழ்விற்கு அவசியமான எந்த விடயமாயுமிருக்கலாம். சில உதாரணங்கள் வருமாறு:- விஞ்ஞானம், தொழிற்றுறை, தகவல் தொழில் நுட்பம், இசை, நடனம், சங்கீதம், கணிதம், விளையாட்டு, சமூக மேம்பாடு, விண்வெளி, கணினி, மொழி, சிற்பக்கலை, கட்டடக்கலை, கல்வி, மருத்துவம் இவ்வாறு இப் பட்டியல் நீண்ட கொண்டே போகும்.

எனவே எம் சந்ததியின் நல்வாழ்விற்காக, எமது சேவையை விரிவுபடுத்த, இவ்விடயத்தில் அனைத்து வாசக நெஞ்சங்களினதும் சுய விருப்பிலான உதவியை வேண்டி நிற்கின்றோம்.

''அன்பும் அறிவும், வீரமும் ஓங்குக''!

நன்றி, வணக்கம்
அன்புடன்
ஆசிரியர்.



அண்மையில் தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் அறிவுக்கதிர் கன்னி இதழ் அறிமுக வெளியீடு நடைபெற்றது. அந்நிகழ்வில் எமது சஞ்சிகையின் திருக்கோணமலை மாவட்டக் கிளையின் ஆசிரியரும், செயலாளருமான திரு.சீ. மதியழகன் உரையாற்றுகையில் (இடமிருந்து வலமாக) துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.மா. தேவேந்திரனும், எமது சஞ்சிகையின் முல்லைத்தீவு மாவட்டக் குழுவின் தலைவரும், முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளருமான திரு.த. குருகுலராசாவும், நிகழ்வு நடைபெற்ற கல்லூரியின் பிரதி அதிபர் திரு.அ. அருணகுமார் ஆகியோரும் அமர்ந்திருக்கின்றனர்.

# சிரிப்பே சிறந்த மருந்து

நோயின்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கு மிகச் சிறந்த மருந்து எது என்றால் அது சிரிப்புத்தான் என்று உறுதிபடக் கூறப்படுகின்றது.

20 வருடங்களாக ஆராய்ச்சி நடத்திய உடற்கூறு வல்லுநர்கள் எமது மனதிற்கும் எமக்கு வருகின்ற நோய்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்று கண்டறிய முயற்சித்தார்கள்.

இவ் ஆராய்ச்சியின் மூலம் நமது எண்ணங்களுக்கும் மனநிலைக்கும் ஏற்ற மாதிரி நம் உடம்பிற்குள் இயங்குகின்ற கலங்களின்/ உயிரணுவின் (செல்களின்) நோயெதிர்ப்பு சக்தி கூடுகின்றது அல்லது குறைகின்றது என்று அறிந்தார்கள். நம் உடம்பிற்குள் இருக்கின்ற நரம்புகள் ஒரு வேதிப் பொருளை வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றது. அதற்கு C.G.R.P சீ.ஜீ.ஆர்.பி என்று அவர்கள் பெயரிட்டிருக்கின்றார்கள். நம் நரம்புகளுக்கு அடியிலிருக்கின்ற நோய் எதிர்ப்புச் சக்தி கலங்களின் பணியை ஊக்கப்படுத்துவதும் மட்டுப்படுத்துவதும் இதுதான். நமது மனநிலைக்கு தக்கவாறு இது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உற்பத்தியாகின்றது.

நாம் மனம் விட்டுச் சிரிக்கும் போது இந்த சீ.ஜீ.ஆர்.பீ அதிகமாகச் சுரக்கின்றது என்பது தான் அவர்கள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்த உண்மை.

நியூயோர்க் மாநிலப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆதர்ஸ்ரோன் என்பவர் தனது ஆய்வின் மூலமாகப் பல உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கின்றார்.



உலகத்திலுள்ள மிகச் சிறந்த மருந்து மனம் விட்டு சிரிப்பது தான் என்று அவர் சொல்கின்றார். எனவே மனம் விட்டு நன்றாகச் சிரித்தால் பல வியாதிகளை நாம் விரட்டி விடலாம். இப்பொழுது வெளிநாடுகளில் பல நோயாளிகளுக்கு சிரிப்பு வீடியோப் படங்களைப் பாருங்கள் என்று டாக்டர்கள் அறிவுரை கூறுகின்றார்கள்.

வில்லியம் பிறை என்ற மருத்துவ அறிஞர் சிரிப்புப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்துள்ளார். நோய் எதிர்ப்புச்சக்தியை உடம்பில் உற்பத்தி செய்யக்கூடிய வெள்ளை அணுக்களின் பணியைச் சிரிப்பு வேகப்படுத்துகின்றது என்று அவர் கூறுகின்றார்.

சிரிப்புப் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற அறிஞர்களுக்கு ஜெலொகோ லொஜிஸ்ட் என்று பெயரிடப்பட்டுள்ளது. இவர்கள் பல ஆராய்ச்சிகளைச் செய்து பல உண்மைகளை வெளியிட்டிருக்கின்றார்கள்.

சிரிப்பு நமது இரத்தத்தில் அதிகப்படியான பிராணவாயு இருப்பதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. சிரிப்பினால் இருதய தசைகள் வலுவடைகின்றன. அதிக இரத்த அழுத்த அளவு குறைகின்றது.

நுரையீரல்கள் நன்றாக வேலை செய்கின்றன. அத்துடன் என்-சீபேலின் (ENCEPHALIN) என்கின்ற உட் சுரப்பை (HORMONE) நம் உடம்பில் சுரக்கச் செய்கின்றது. தசை வலியை நீக்க உதவுவது இந்தச் சிரிப்பு, சிரிப்பதனால் இரத்தக்குளாய் விரிவடைகின்றது, இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. அத்துடன் மன இறுக்கமும் தளருகின்றது. சிந்தனை களுக்கும் உணர்ச்சிகளுக்கும் தலைமைப்பீடமாக செயற்படுகின்ற நமது மூளையினுடைய வலது பக்கப் பகுதி சிரிப்பினால் நன்றாகச் செயற்படுகின்றது. சிரிப்பு குடற்புண் (PEPTIC ULCER) மாதிரியான புண்கள் வராமல் தடுக்கின்றது.

இதனால் தான் இறைவன் உலகிலுள்ள ஜீவராசிகளிலே மனிதர்களுக்கு சிரிப்பெனும் சிறந்த மருந்தை தந்திருக்கின்றானோ? எனவே சிரிப்போம்! நோய்களை விரட்டி, ஆரோக்கிய வாழ்வு வாழ்வோம்!!

உலகிலேயே குறைவாகச் சிரிப்பவர்கள் பிரித்தானியர்கள் என்றும் கூடுதலாக பிரஞ்சுக்காரர்கள் சிரிக்கிறார்கள் என்றும் புள்ளிவிபரம் கூறுகின்றது. எமது நிலை எவ்வாறோ?

நன்றி: இன்று ஒரு தகவல்.

# ஒலிம்பிக் போட்டிக்கு பறவைகளும் பயிற்சி



வேடந்தாங்கல் என்ற இடத்தில் (இந்தியாவில்) பறவைகள் சரணாலயம் உண்டு. பல்வேறு நாடுகளிலிருந்து ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து பல்வேறு வகையான பறவைகள் இந்த சரணாலயத்திற்கு வருகின்றன. தங்கள் நீண்ட பயணத்தை தொடங்குமுன்னதாக தங்களை எவ்வாறு தயார் செய்து கொள்கின்றன என்பது குறித்த தகவல்களை 'சயன்ஸ் மானிட்டர்' என்ற அமெரிக்க விஞ்ஞான ஏடு குறிப்பிட்டுள்ளது.

பறவைகள் இடப்பெயர்ச்சியினைத் தொடங்குவதற்கு முன்னர் முக்கியமான ஆயத்தங்களை மிகவும் கவனத்துடன் செய்கின்றன. தங்கள் இறகுகளை உதிர்த்து விட்டு புதிய நீண்ட இறகுகளைத் தோற்றுவித்துக் கொள்கின்றன. தினந்தோறும் கொஞ்சத் தூரம் வேகமாகப் பறந்து (மனிதர்கள் ஒலிம்பிக் போட்டிக்கு பயிற்சி எடுப்பது போல்) பயிற்சி செய்கின்றன. இடம்பெயர்தலைத் தொடங்குமுன் அதிகமான உணவை உண்டு உடலைக் கொழுப்படையச் செய்து கொள்கின்றன. பல நாட்கள் பட்டினி இருக்க நேர்ந்தாலும் சமாளிக்க இந்த ஏற்பாடு. அனுபவமுள்ள ஆண் பறவைகள் முன்னால் பறக்க மற்றவை அவற்றைப் பின்பற்றுகின்றன. (வன்னியிலுள்ள சுண்டிக்குளம் கடல்நீரேரியில் சைபீரிய செந்நாரைகள் வந்து தங்கிப்போவது அப்பிரதேசத்தை அழகுபடுத்தும் நிகழ்வாகும்)





# சாதனையாளனுக்கு தங்கப்பதக்கம்



2002ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் '10ஏ' எடுத்து வன்னி பெருநிலப்பரப்பில் சாதனை படைத்த மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியால மாணவன் செல்வன். இ.மா.ம.தீபனுக்கு 'அறிவுக்கதிர்' சஞ்சிகை நிர்வாகத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு அரச அதிபர். திருமதி. சு.இமெல்டா தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கின்றார். இந்நிகழ்வு 29-10-2003 இல், புதுக் குடியிருப்பில் அறிவுக்கதிர் கன்னியிதழ் வெளியிட்டபோது இடம்பெற்றது. இவருடைய படம் (tamil canadian. com) தமிழ் கனடியன் கொம்மிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில்

**க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவன் ஒருவனுக்கு மட்டும் எமது புலமைப்பரிசில் திட்டத்தில் உதவி வழங்கவுள்ளோம். ஏற்புடைய உண்மையான காரணங்களினால் தெரிவான எந்த மாணவனோ, மாணவியோ பல்கலைக்கழகப்படிப்பை தொடர்வதில் பொருளாதார நெருக்கடியை சந்தித்து இத்திட்டத்தின் கீழ் உதவி பெறவிரும்பினால் தனது நிலையை மிகத் தெளிவாக விளக்கி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்**

*ஆசிரியர்*


அறிவுக்கதிர்

# புதிய கல்வி உலகின் புதிய பாதை

- ஏழாலை ரமணன் -

நாளுக்கு நாள், நிமிடத் திற்கு நிமிடம் சனத்தொகை அதிகரித் துச் செல்கின்றது. இவ்வாறு அதிகரித் துச் செல்லும் சனத்தொகைக்கு ஏற்ப மக்களிடையேயான போட்டிகளும் அதிகரிக்கின்றன. இன்று மனிதர் களிடையேயான போட்டிகளின் அளவு களை வரையறுக்க முடியாதுள்ளது. உணவுக்கு, உடைக்கு வீட்டுக்கு, நாட்டிற்கு, வியாபாரத்திற்கு, உயர்கல்விக்கு, உத்தியோகத்திற்கு, பதவி உயர்வுக்கு, என்றவாறு பலவித போட்டிகள் காணப்படுகின்றன. எனவே மேற்கூறப்பட்ட போட்டிகளில் தேறுவதன் மூலமே இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் இன்று தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இதற்கு நுண்ணறிவும் (I, Q), தகவல் தொழில்நுட்பமுமே (I.T) இன்றைய பாதைகள்.

முன்பு ஒருமுறை கொழும்பு நகரின் பிரபல நிறுவனமொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நேர்முகத்தேர்வு நடைபெற்றது. அதில் கலைத்துறை சிறப்புப் பட்டதாரி ஒருவர் பங்கு பற்றினார். அவர் தனது ஆவணங்களை எல்லாம் கொண்டு சென்று மேல் மாடியிலுள்ள அந் நிறுவனத்தில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றினார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட வினா ''நீங்கள் எத்தனை மாடிகளை (Floors) கடந்து மேலே வந்துள்ளீர்கள்?''



என்பதாகும். அதற்கான சரியான விடை அவரால் கூறப்படாமையினால் அவருக்கான அந்த வேலை கிடைக்கவில்லை இதற்குக் காரணம் அவரது நுண்ணறிவுக் குறைவேயாகும். அதாவது சூழல் பற்றிய நுண்ணறிவுத் திறன் இன்மையாகும்.

இதே போன்று அம்புலி மாமா என்ற சிறுவர் புத்தக மொன்றில் வெளிவந்த கதையில், குகை யொன்றில் வைத்து ஒரு இளவரசியை அடைத்து விட்டு, அவ் இளவரசியை மீட்ப வர்க்கே அவரை மணம் முடித்துக் கொடுப்போம். என ஓர் அரசனால் அறிவிக் கப்பட்டிருந்தது. குகையானது ஒரு கதவால் அடைக்க ப்பட்டிருந்தது. அருகிலுள்ள சுவரில் மனிதர்களின் நான்கு கால்களும், நான்கு கைகளும், நான்கு கண்களும் வரையப்பட்டு அவற்றின் கீழே 'நான் குகை என்னைத் தொடு' என்றிருந் தது.

அப்போட்டியில் கலந்து கொண்ட பலரும் 'நான் குகை என்னைத் தொடு' என்ற வாசகத்தைப் பார்த்து விட்டு குகையைத் தொட்டனர். எனினும் பயன் இல்லை. ஆயினும் துரைவீரன் என்றொருவன் அவ் வாசகத்தை நன்றாக மீண்டும் மீண்டும் படித்து விட்டு அங்கே வரையப்பட்டிருந்த நான்கு கைகளையும் தொட்டான் உடனே குகை வாசல் திறந்தது. அவன் இளவரசியை மணம் முடித்து நாட்டின் இளவரசன் ஆனான்.

இங்கு 'நான் குகை என்னைத்தொடு' என்ற வாக்கியத்தை உன்னிப்பாக அவதானித்தால் 'நான்கு கை என்னைத் தொடு' என்ற வாக்கியம் புலப்படும் இதனை அவதானித்தே துரைவீரன் சுவரில் வரையப்பட்டிருந்த கைகளைத் தொட்டதன் மூலம் இளவரசனானான்.

இது ஒரு கதை தான் எனினும், நுண்ணறிவு என்ற விடயப் பரப்பில் நம்மைப்பற்றி இதன் மூலம் ஒரு செய்தி கூறப்படுகிறது.

இன்று உலகின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஒரேயொரு மாபெரும் சக்தி புலனாய்வு (Intelligence) ஆகும். புலனாய்வில் எவன் ஒருவன் அல்லது எந்தவொரு நாடு உயர்வாக உள்ளதோ அந்நாடே உலகின் தலைவன்.

இவ்வாறே தற்போது எவனொருவன் நுண்ணறிவில் (Intelligent Quotient) உயர்வாக உள்ளானோ அவனே இவ்வுலகின் அறிஞனாக மதிக்கப்படுவான்.

முன்னைய காலங்களில் கல்வித் தகுதிகளே ஒருவரின் தகுதியாகக் கருதப்பட்டது. பின்னர் ஒரே கல்வித் தகுதியில் பலர் போட்டி போடும் நிலை உருவானது. அரச எழுதுநர் பதவிக்கு க.பொ.த (சா/த) சித்தி என்ற கல்வித் தகுதியில் எழுதுநர்களை நியமிக்கும் நடை முறை உண்டு. அதற்காக பல ஆயிரம் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் போதே சிக்கல் உருவாகியது. எனவே ஒரே கல்வித் தகுதியுள்ளவர்களை ஏதோ ஒரு வகையில் வேறுபடுத்தி அவர்களுள் குறிப்பிட்ட சிலரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை உருவானது. இச் சிக்கல் தனியார் துறைகளுக்கும் உண்டு.

> **ஒருவரின் கல்வித் தகுதிக்கும் அவரின் நுண்ணறிவுக்கும் (பொது விவேகம்) தொடர்பு கிடையாது. அவர் கல்வியறிவில் குறைவாக இருந்தாலும் நுண்ணறிவில் உயர்வாக இருக்கலாம்.**

இதே போன்று ஒரே பதவியிலிருப்பவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க முற்படும் போதும், அவர்களை ஏதோ ஒரு வகையில் வேறுபடுத்த வேண்டியுள்ளது. இவ்வேறுபாட்டினை இனங்காண்பதற்கு ஒரு கருவியின் தேவை பலராலும் உணரப்பட்டது.

இந்நிலையிலேயே கடந்த சில வருடங்களிற்கு முன் பொது அறிவை (General Knowledge) இக்கருவி என ஏற்றுப் பலரும் பயன்படுத்தினர். இப்பொது பொது அறிவு என்றால் என்ன? என்றொரு கேள்வி எழுகிறது. பொதுவான அறிவே பொது அறிவு என நம்பப்பட்டது. மழை பெய்யாத ஊரில் எப்போதாவது மழைபெய்யும் திகதி பொது அறிவு. அதுவரை ஒருவரும்

செய்யாததை ஒருவர் செய்தால் அது பொது அறிவு. இயற்கையில் நீளமானது, பெரியது, சிறியது நெளிவு சுழிவு எல்லாம் பொது அறிவு. அவற்றிலும் செயற்கையாக உள்ள தும் பொது அறிவு. ஆதலால் பொது அறிவின் எல்லையானது அதிகரித்து இறுதியில் முடிவிலி ஆனது மட்டு மன்றி நாளுக்கு நாள் மாற்றம் காணவும் தலைப்பட்டது. இதனால் ஒருவரின் அறிவை அளவிடும் கருவியாக பொது அறிவை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றியது.

> முன்பு உலகில் மிக நீண்ட நதி நைல்நதி
> தற்போது உலகில் மிக நீண்ட நதி அமேசன் நதி

இருப்பினும் மேற் சொன்ன பிரச்சினைகளுக்காக பொது அறிவை முற்று முழுதாக நிராகரித்து விட முடியாது. இன்று பொது அறிவு என்று கருதும் போது ஒரு பொது அறிவு வினாவுக்கான விடையை எதிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனும் அறிவே பொது அறிவு எனப்படுகிறது.

அமேசன் நதியின் நீளம் என்ன? என்ற வினாவுக்கு ஒருவர் அமேசன் நதியின் நீளத்தை அறியக் கூடிய புத்தகத்தையோ அல்லது இடத்தையோ அறிந்திருப்பாராயின் அது பொது அறிவு என தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் பல ஆயிரம் விடயங்களை (Memory) நினைவில் வைத்திருத்தல் என்பது சாதாரண ஒரு விடயமல்ல.



எனவே தான் மேற் சொன்ன பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும் ஒவ்வோர் மனிதனதும் உள ஆற்றலை (Mental Ability) அளவிடுவதற்கும் இன்று பொது உளச்சார்பு (General Aptitude) பயன்படுகிறது.

உலகெங்கிலும் சரி உள் நாட்டிலும் சரி அரச, தனியார் வேலைத்தளங்களிலும் சரி நியமன ங்கள் செய்வதற்கும் பதவி உயர்வு கள் வழங்குவதற்கும் பொது உளச் சார்பு பயன்படுத்தப்படுகிறது.


அத்துடன் பல்கலைக்கழக அனுமதிக்கும் பொதுச் சாதாரண பரீட்சை (General Common Test) ஒன்றையும் இலங்கை அரசு அறி முகப்படுத்தியுள்ளது. இப்பரீட்சை உயர்தர மாணவர் எல்லோருக்கும் உரியதாகும். இதன் புள்ளிகள் வெட்டுப் புள்ளிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படாவிடினும், இப்பரீட்சை

யில் சித்தியடையாத ஏனைய பாடங்களில் சித்தியடைந்த ஒருவர், ஒரு போதும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட மாட்டார், என்றும் இலங்கை அரசால் அறிவிக்கப் பட்டுள்ளது.

வன்னியில் உள்ள மாணவர்கள் பலரும் ஏனைய மூன்று பாடங்களில் சிறப்பாக சித்தி எய்திய போதும் பொதுச் சாதாரண பரீட்சை யில் மிகக் குறைந்த மட்டத்திலேயே சித்தி எய்தியுள்ளனர். இது அவர்களின் எதிர்காலத்தையே பாதிக் கும். மிகவும் கடின படிப்பின் மூலம் ஏனைய பாடங்களில் சித்தி எய்திய போதும் இவர்கள் பொதுச் சாதாரண பரீட்சையில் பெறும் குறைவான புள்ளிகள் அவர்களின் கடின உழைப்பை வீணாக்கி விடுகின்றது. எனவே மாணவராகிய நாம் இனிவரும் புதிய கல்விப் பாதையில் பயணிப்பதற்காக பொது உளச்சார்பு எனும் வண்டியில் ஏறிக் கொள்வோம்.

**ஜப்பானில் 15,000ற்கும் அதிகமானவர்கள் 100 வயதிற்கும் மேல் வாழ்ந்துள்ளார்கள். பெரும் பாலானோர் பெண்கள். அண்மையில் 114 வயதுடையவர் இறந்து அதிகூடிய வயதுடையவர் சாதனையில் ஜப்பானில் முதலிடம் பிடித்துக் கொண்டார். இவர் மதுபானம் பாவிக்காதவர்; ஆனால் மாமிசம் உண்டு வந்தார். ஜப்பானில் நீண்ட ஆயுளுக்கு மீன் அதிகம் உண்பதும் முக்கிய காரணமாக கூறப் படுகின்றது.**


## தி / நிலாவெளி தமிழ் மகா வித்தியாலய மாணவன் ஜப்பான் செல்ல தகுதிபெற்று சாதனை



முல்லைத்தீவு முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், திருக்கோணமலை நிலாவெளி 2ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வன். உதயகுமார் தட்ஜெனன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று சாதனை படைத்துள்ளான்.

இவன் மு/முள்ளிய வளை அ.த.க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து தரம் 4,5 ஆகியவற்றை தி/நிலாவெளி தமிழ் மகாவித்தியால யத்திலும் கற்று 2003ம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழிப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் 174 புள்ளிகளுடன் 3ஆம் இடத்தை யும் பெற்று இலங்கைத் தமிழ் மாணவன் சார்பில் ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளான். இவ்வா றான கிராமப்புறப் பாடசாலை மாணவர்களது சாதனை மென்மேலும் ஊக்குவிக்கப்படவேண்டும் என்ற நோக்கில் செல்வன். உ.தட்ஜெனனை அறிவுக்கதிர் வாழ்த்தி பாராட்டுக்க ளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

# புதியவர்களுக்கு......



கணினித் துறையில் மிகவும் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ள, தமிழில் இணையம் என்றழைக்கப் படும் Internet பற்றிய பல பயனுள்ள தகவல்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

ஆதி மனிதர் தமக்கிடையே தொடர்பாடலை முரசு, தீ போன்றவற்றைப் பயன்படுத்தியும், காலப்போக்கில் புறாவைப் பயன்படுத்தியும் மேற்கொண்டனர். அதன்பின் தபால் தொடர்பின் மூலமும் தற்போது கணினி வழியாகவும் இருந்த இடத்திலிருந்துகொண்டே உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் தொடர்பாடலை மேற் கொள்கிறான்.

கணினியின் அறிமுகம் மானிட இனத்தின் அரிய சாதனையாகக் கொள்ளப்படும் அதேவேளை, இணையத்தின் அறிமுகம் மிகப்பாரிய வளர்ச்சி என்றே கூறலாம்.

ஏனெனில், அறிவியல், அரசியல், சினிமா, இசை, உலக விவகாரங்கள் போன்ற இன்னும் பல விடயங்களை இருந்த இடத்திலிருந்து கொண்டே அறிந்து கொள்ள இணையம் வழிவகுக்கின்றது.

**இணையம் என்றால் என்ன?**

முதலில் "Net" என்பதை கருதுவோம். இதனை ஓர் உதாரணம் மூலம் விளக்கலாம். ஒரு அலுவலகத்தின் வெவ்வேறு பகுதிகளிலுமுள்ள கணினிகளை கருதின், அவை தமக்கிடையேயான தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியவாறு இணைக்கப்பட்டிருப்பின் அது "Net" அல்லது ''வலை" எனப்படும். இதனை கொஞ்சம் விரிவாக்கி இன்னொரு அலுவலகத் துடன் இணைப்பின் அது ''வலைப் பின்னல்" (Network) எனப்படும். இவ்வாறான வலைப்பின்னல் உலகெங்கும் விரியும் போது அது இணையம் எனப்படும்.

இனி இவ் இணையம் உருவாக அடிக்கல் இடப்பட்ட வரலாற்றை நோக்குவோம்.

1967ம் ஆண்டு Department of Defence எனப்படும். அமெரிக்க பாதுகாப்புத் துறையினர், தங்களது தேவைகளுக்காக "ARPANET" என்ற வலைப் பின்னலை உருவாக்கினார்கள். இங்கு "ARPA" என்பது, Advanced Research Project Administration என்பதைக் குறித்தது. இதன் வெற்றிகரமான செயற்பாட்டை அறிந்த நிறுவனங்கள் சார்ந்தோர் மற்றும் அறிவியல் வல்லுநர்கள் இதில் சேர ஆர்வம் கொண்டனர். இவ்விதம்

வளர்ச்சியடைந்த வலைப்பின்னல்கள் காலப்போக்கில் விரிவடைந்து இணையம் தோற்றம் பெற்றது.

இவ்விணையம் முற்றிலும் சுதந்திரமான ஊடகமாகும். ஒரு தனிநபர் அல்லது ஒரு குழு இணையத்தை கட்டுப்படுத்தவில்லை. எனினும் இதனை வழிநடத்த ஓர் அமைப்பு உண்டு. இது இணையச் சேவை வழங்கும் நிறுவனம் (Internet Service Provider) என்றழைக்கப்படும்.

இச்சேவையை வழங்குபவர்களிற்கு நாட் கட்டணம் செலுத்த வேண்டும். எமது நாட்டில் இச் சேவையை வழங்கும் நிறுவனங்கள் பல உள்ளன. அவற்றுள் சில.

Sri Lanka Telecom
Eureka
Lanka Internet
Pan Lanka

கணனி ஒன்றில் இணைய இணைப்பைப் பெற தேவையானவை:

1) Modem
2) Telephone Connection - தொலைபேசி இணைப்பு
3) Communication Software - தகவல் தொடர்பு மென்பொருள்
4) ISP நிறுவனத்திடம் அனுமதி

இனி இணையத்தின் பயன்பாடுகள், மக்கள் அதை ஏன் நாடுகிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

இணையத்தை நாம் மிகப் பெரிய கலைக்களஞ்சியம் (Encyclopedia) எனக் கொள்ளலாம். ஏனெனில் இதன்மூலம் எத்துறை சார்ந்த தகவல்களையும் குறைந்த செலவில் மிகக்குறுகிய நேரத்தில் இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

புதிய பேனா நண்பர்களின் தொடர்புகளை இலகுவாக ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. இது Cyber - Friend Ships என்றழைக்கப்படும். இணையத்தின் மூலம் UNITEC இனால் மேற்கொள்ளப்படும். Diploma in Education Technology ஐ குறிப்பிடலாம். இப்பொழுது பத்திரிகைகளையும் இணையத்தின் மூலம் வாசிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் பிறருக்கு மின்னஞ்சல் அனுப்பவும், பிறரிடமிருந்து மின்னஞ்சலைப் பெறவும் இணையம் பயன்படுகின்றது.

இவற்றுடன் பல நன்மைகட்கு வழிவகுக்கின்ற இணையத்தளமானது தீமைகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை. இதில் சட்டவிரோதமான செயல்கள் அடங்கும். அதாவது ஒரு பாவனையாளர் இன்னொரு பாவனையாளரின் இரகசிய தகவல்களினை அறிய வழிவகுக்கின்றது. அத்துடன் ஆபாச திரைப்படங்கள் போன்றவற்றை இதன்மூலம் பார்க்கக்கூடியதாகவுள்ளது. இதனைவிட கணினி வைரஸ் எனப்படும் மிகப்பாரிய பிரச்சினை இப்பொழுது இணையம் மூலம் ஏற்பட்டுள்ளது. இன்று பெரும்பாலான வைரஸ்கள் இணைத்தின் மூலமே பரப்பப்படுகின்றன.

பல நன்மைகளை வழங்கும் இணையத்தினை மனிதன் தீய வழிகளில் பயன்படுத்துகின்ற போதிலும் இன்று இணையத்தினைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறையவில்லை. அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

செல்வி. P.றேனுகா
வித்தியானந்தாக் கல்லூரி
முள்ளியவளை.

# ENGLISH TO THE ERUDIE AND THE NOVICE

Since the British period in our country the use of English was felt important due to the Government policy. But since 1956 the Government reversed this situation, owing to the change in policy. Now importance is again given to the English language.

According to a recent media report, English teachers are being hired from India.

Alas! What a pity!

Young generation is in desperate need of English knowledge now.

Hence we have decided to allocate a few pages for the English articles, quotations, puzzles etc, to create an interest, awareness and attract the attention of youngsters to gradually learn English. **(Please contribute articles etc to us)**

Let us be confident that we will learn English very soon. From today, please listen, speak, read and write English. No matter even if you are wrong. That is the way to learn English.

Wish you good luck and best wishes.

Thank you.
Sincerely your's in service
Editor.

If you failed to plan;
You have planned to fail!


(நீ திட்டமிடத் தவறினால்;
நீ தோற்பதற்குத் திட்டம்
தீட்டி விட்டாய்!)

அருட்திரு. எட்மண்ட் றெஜினோல்ட் அவர்களின் உளவியல் கட்டுரைத் தொடர் எமது அடுத்த இதழில் இடம்பெறும்.

**மாமியார் உடைத்தால் மண்சட்டி**
**மருமகள் உடைத்தால் பொன்சட்டி**

# GENIUS

**If you see the spark of a genius in a poor man, do not neglect him. Know this, the smallest spark has been known to grow into devastating forest fires. The spark of genius will find its own outlet sooner or later. And then it may not manifest in a form favourable to you. So identify it. Develop it. Nurture it. Let it grow to full potential. And then, harness it so that you get the greatest benefit of its power.**



*Remember this. The King should look all around him for this spark of genius. He should then nurture it to full glory and use it to better his own functioning.*

## மேதை ? ? ?.........

ஒரு ஏழையிடத்தில் மேதைக்கான அறிகுறியை (தீப்பொறியை) நீ கண்ணுற்றால் அதை அலட்சியம் செய்யாதே. மிகச்சிறிய ஒரு தீப்பொறியே பேரழிவை ஏற்படுத்தும் காட்டுத்தீயாக வளர்கின்றது என்பதை அறிந்து கொள். மேதையின் தீப்பொறி விரைவிலோ காலம் சென்றோ அதற்கான சொந்தப்பாதையைக் கண்டு விடும். அதன் பின் உனக்கு அனுகூலமான நிலையை அது வெளிப்படுத்தாது. எனவே அதை இனம் காண்; அதை விருத்தி செய்; அதை பராமரித்து வளர்; அது முழு வல்லமைக்கும் வளரட்டும். அதன் பின், அதன் வல்லமையில் அதியுயர் பயனைப் பெறும் பொருட்டு, அதைக் கட்டி ஆட்சி செய்.

இதை ஞாபகத்தில் கொள். மேதையின் அறிகுறியை (தீப்பொறியை) கண்டு கொள்வதற்காக அரசன் தன்னைச்சுற்றி எல்லாத் திசைகளிலும் பார்க்க வேண்டும்; அதன் பின் அவன் அதைப் போற்றி முழுப் பேரொளி நிலைக்கு வளர்த்து, அவனுடைய பணிகளை மேம்படுத்துவதற்காக, அதைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த நீதி நெறிக் கூற்றைப் பயன்படுத்தி சொல்வளம் பெருக்குவோம்

GENIUS - மேதை
DEVASTATE - பேரழிவு, பாழ்படுத்து
SPARK - தீப்பொறி, திடீரெனத் தூண்டு
FAVOURABLE - அனுகூலமான, ஆதரவான
MANIFEST - வெளிப்படையான, தெளிவான
IDENTIFY - இனம் காணுதல், அடையாளம் காணுதல்
DEVELOP - விருத்தி செய், விபரி
NURTURE - பராமரி, வளர்
POTENTIAL - உள்ளுறவுள்ள, மறைத்துள்ள
HARNESS - அடக்கி உபயோகத்திற்கு உரியதாக்குதல்
GLORY - மகிமை, பேரொளி

'சேற்றிலே செந்தாமரை', குப்பையிலே குன்றிமணி' என்ற கூற்றுக்களையும் ஞாபகமூட்டுவது இவ்விடத்தில் பொருத்தமாயிருக்கும். உலக மேதைகள் பலர் ஏழைக் குடும்பத்தில் தோன்றியவர்களே என்பதற்கு சரித்திரம் சான்றாகும். உண்மையான மேதைகளும், தலைவர்களும், உருவாக்கப்படுவதில்லை. அவர்கள் பிறவியிலேயே அவ்வாறான குணதிசயங்களுடனேயே அவதரிக்கின்றார்கள் என்பதை சரித்திரம் உணர்த்தி நிற்கின்றது. பணம் கிடைத்து விட்டால் மட்டும் மேதையாகி விட முடியாது. மேதைகளின் வழிகாட்டலிலேயே பலசாம்ராச்சியங்கள் உலகப் புகழ் பெற்றன. 'சாணக்கியன்' என்ற சொற்பிரயோகம் சாணக்கியன் அல்லது கௌடில்லியர் என்ற மேதையின் திறமையினாலேயே காரணப் பெயராக திறமையை உணர்த்துவதற்கு பயன்படுத்தப் படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள ஆங்கிலக் கூற்றும் இவற்றையே நமக்கு உணர்த்தி நிற்கின்றது. எனவே எங்கெல்லாம் திறமையின் ஒளிக்கீற்று தென்படுகின்றதோ, சாதி, சமய, மத, மொழி வேறுபாடின்றி அந்த ஒளியைக்கொண்டுள்ள மனிதனை (சக்தியை), தனிமனிதனும், சமுதாயமும், ஆட்சியாளர்களும் இனம் கண்டு அதை அரவணைத்து, பேணி வளர்த்து வீடும், சமுதாயமும், நாடும் நலம் பெற உறுதி பூணுவோமாக.


மொழி பெயர்ப்பு, கருத்துருவாக்கம்
[illegible]





**பறவைகளின் மொழி?......**

விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் இதுவரை 8600 வகையான பறவைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பறவைகளுக்கும் மொழிகள் உண்டு. அவை ஒன்றுடன் ஒன்று உரையாடிக் கொள்கின்றன என்று கூறுகின்றார் மேற்கு ஜேர்மனியில் ஃப்ரெய்க்பர்க் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் பிரிவில், ஆராய்ச்சியாளராக இருக்கும் டாக்டர் ஜெரார்ட் தீல்க் என்பவர். பறவைகளின் இசை ஒலியும் வேறு ஒலிகளுமே அவற்றின் பேச்சுக்களாக உள்ளன. பறவைகளின் சிறு ஒலிகளுக்குக் கூட குறிப்பான அர்த்தம் உண்டு. உணவு தேடுவதற்கென ஓர் ஒலி, எச்சரிக்கைக்கு ஓர் ஒலி, கெஞ்சுவதற்குக் கூட ஓர் ஒலி இப்படிப் பலவிதம்!



# THE PLATE OF GOLD



One day a Wonderful plate made of gold fell from heaven into the court of a temple at Benarees and on the plate these words were inscribed a proclamation that every day at twelve o'clock all who would like to claim the plate should assemble at the temple to have their kind deeds judged.

Every day for a whole year all kinds of holy men, hermits, scholars and Nobles come, and related to the priests their deeds of charity and the priests in solemn council heard their claims. At last they decided that the one who seemed to be the greatest lover of mankind was a rich man who had that very year given all his wealth to the poor. So they gave him the plate of gold. But when he took it in his hand, it turned to worthless lead; though, when he dropped it in his amasement on the floor, it became gold again.

For another year claimants came; and the priests awarded the prize three times. But the same thing happened, showing that Heaven did not consider these men worthy of the gift.

Meanwhile a large number of beggars came and lay about the temple gate, hoping that the claimants who came would give them alms to prove they were worthy of the golden plate. It was a good thing for the beggars, because the pilgrims gave them plenty of money; but they gave them no sympathy, nor even a look of pity.

At last a simple peasant, who had heard nothing about the plate of gold, came; and he was so touched by the sight of the miserable beggars, that he wept; and when he saw a poor blind and maimed wretch at the temple gate, he knelt at his side and took his maimed hands in his and comforted him with kind words. When this peasant came into the temple, he was shocked to find it full of men boasting of their kind deeds and quarreling with the priests. One priest, who held the golden plate in his hand, seeing the peasant standing there, beckoned to him; and the peasant came, and knowing nothing about the plate, took it in his hands. At once it shone out with three times its former splendour, and the priests said, "Son, the gift is yours; for you love best."



# தங்கத்தாம்பாளம்

(மேற்குறிப்பிட்டுள்ள ஆங்கிலப் பாட்டின் சுருக்கம் தமிழில்) ஒரு நாள் பெனாறேஸ் கோவிலின் வளாகத்தில் மோட்சத்திலிருந்து ஒரு அதிசய தங்கத்தாம்பாளம் வீழ்ந்தது. அத்தாம் பாளத்தில் கீழ் குறிப்பிடும் விடயம் பொறிக்கப்பட்டிருந்தது.

இத்தாம்பாளத்தை பெற விரும்புவர்கள் ஒவ்வொருநாளும் நண்பகல் 12 மணிக்கு கோவிலில் கூடி தமது காருண்ணிய செயலின் தன்மையை நியாயப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாளும் எல்லா விதமான மனிதர்களும் (உதாரணம் வணக்கத்திற்குரியவர்கள், பெண் துறவிகள், கல்விமான்கள், பிரபுக்கள் போன்றவர்கள்) அர்ச்சகர்களிடம் தத்தமது காருண்ணிய செயல்கள் பற்றி எடுத்துக் கூறிவந்தனர். இறுதியாக தனது எல்லா செல்வத்தையும் ஏழைகளுக்கு வழங்கிய ஒருவர்தான் மானிடர்களை அதியுயர்வாக நேசிப்பவர் என்று முடிவு செய்தனர். அதன்படி அந்த தாம்பாளத்தை அவரிடம் கொடுத்தனர். என்ன ஆச்சரியம்! அந்த தாம்பாளம் உடனடியாக பெறுமதியற்ற ஈயமாக மாறியது. அதிர்ச்சியில் அம்மனிதர் அதை கீழே போட மீண்டும் தாம்பாளம் தங்கமாக மாறியது.

அடுத்த ஆண்டும் மூன்று முறை இவ்வாறு நிகழ்ந்தது. மோட்சத்தால் இந்த முடிவு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது தெரிய வந்தது.

இந்தக் கோவிலுக்கு வரும் தனவந்தர்களிடமிருந்து தமக்கு பணம் கிடைக்கும் என்பதை அறிந்து, கோவில் சுற்றாடலில் பெரும் எண்ணிக்கையில் பிச்சைக்காரர்கள் கூடினார்கள். அவர்களுக்கு நிறையப் பணம் கிடைத்தது ஆனால் தனவந்தர் களிடமிருந்து அவர்களுக்கு அனுதாப மோ, அல்லது ஒரு காருண்ணிய பார்வையோ கிடைக்கவில்லை.

இறுதியாக சாதாரணமான ஒரு விவசாயி, தங்கத்தாம்பாளம் பற்றி எதுவும் அறியாத நிலையில் அவ்விடத்திற்கு வந்தான். அங்கு குழுமியிருந்த பரிதாபத்திற்குரிய ஏழைகளைக்கண்டு துயரத்தால் கண்ணீர் விட்டான். கோவில் வாசலில் இருந்த ஒரு குருடான முடவனின் பக்கத்தில் அந்த விவசாயி அமர்ந்து, முடவனின் வலுவிழந்த கையை தன்கையில் எடுத்து அவனுக்கு அன்பான சொற்களால் ஆறுதல் கூறினான். அதன் பின் அந்த விவசாயி கோவிலுக்குள் வந்த பொழுது பலர் தமது காருண்ணிய செயல்கள் பற்றி குருவானவர்களிடம் கூறி வாய்த் தர்க்கத்திலீடுபட்டுக்கொண்டிருந்ததை அதிர்ச்சியுடன் கண்டான். அந்த விவசாயியைப் பார்த்த ஒரு குருவானவர் அவனை அழைத்து அவனிடம் அத் தாம்பாளத்தைக் கொடுத்தார். ஒன்றும் அறியாத அவன் அதைப் பெற்றான்; அத்தாம்பாளம் முன்னைய ஒளியிலும் மும்மடங்கு ஒளியுடன் மிளிர்ந்தது. அந்த குருவானவர் 'மகனே இந்தப் பரிசு உன்னுடையது; ஏனெனில் நீயே அதிகம் அன்புடையவன்' என்றார்.

இந்தப்பாட்டு இன்றைய யதார்த்தத்தை எடுத்தியம்புகின்றது. எனவே நாமும் துன்பப்படுபவர்கள் மேல் பரிசுத்தமான அன்பைச் செலுத்தி, எம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்வோமாக!

மொழிபெயர்ப்பு
சுருக்கம்
-காங்கேயத்திருமலைவன்னியான்-

# WEALTH

*Never cringe from possessing wealth. Only they do so who know that they have accumulated it by vile means. Wealth by itself is neither good nor bad. How it is obtained may glorify it or taint it. That which is got by the fruits of one's labours, by not causing any harm to anyone, through honesty and sincerity is wealth rightfully arrived at. What one dose with the wealth also determines whether it is good or bad. If spent on sensual pleasures while the multitudes weep for a loaf of bread, it is not good. One who uses it to give happiness to many is the righteous one.*



*So work hard. Generate wealth. Use it for good purposes. Help those who are presently unable by developing their capacities and making them self - reliant.*

# செல்வம் ? ? ?.......

செல்வத்தை வைத்திருப் பதற்காக கெஞ்சத் தேவையில்லை. அவ்வாறு கெஞ்சுபவர்களுக்குத் தெரியும் தாம் அதனை இழிவான முறையில் சம்பாதித்துக் கொண்டோ மென்று செல்வம் தானாகவே கெட்டதாகவோ அல்லது நல்லதா கவோ அமைவதில்லை அது எவ் வாறு பெறப்பட்டதோ அதைப் பொறுத்தே அது மகிமையடையவோ அல்லது களங்கமடையவோ செய்யும். நேர்மையாகவும், உண்மை யாகவும், எவருக்கும் எந்தத் தீங்கும் விளைவிக்காமலும், ஒருவனுடைய உழைப்பின் பயனாகவும் பெறப்படு வதுமே, சரியான வழியில் பெறப்பட்ட செல்வமாகும். செல்வத்தைப் பயன்படுத்தி ஒருவன் செய்வதைக் கொண்டு அது நல்லதா கெட்டதா என்று தீர்மானிக்கலாம். ஒரு துண்டு ரொட்டிக்காக பெரும்பான்மையானோர் கண்ணீர் விடும் பொழுது, அச்செல் வம் சிற்றின்பத்திற்காகச் செலவிடப் பட்டால் அது நல்லதல்ல. பலருக்கு பகிழ்வைக் கொடுக்கக் கூடியவாறு, ஒருவன் அதை பயன்படுத்துவானா கில் அதுவே நீதியானதாகும், சரியானதாகும்.

எனவே கடுமையாக உழை; செல்வத்தை உருவாக்கு; அதனை நல்ல கருமங்களுக்காகப் பயன்படுத்து; தற்பொழுது வலுவற்றி

ருப்பவர்களை, அவர்களின் வல்லமைகளை வளர்ப்பதற்காகவும், தன்னம்பிக்கையுடையவர்களாக ஆக்குவதற்காகவும் உதவி செய்.

**இக் கூற்றைப் பயன்படுத்தி, சொல்வளம் பெருக்குவோம்.**

CRINGE - கெஞ்சு, பொய்யாகப்புகழ்
ACCUMULATE - (பணம்) சேர், கொஞ்சம் கொஞ்சமாக விருத்திசெய்
GLORIFY - மேன்மைப்படுத்து, வாழ்த்து
MULTITUDE - அதிக எண்ணிக்கை, திரள், கூட்டம்
SENSUAL - சிற்றின்பம், உணர்வு அல்லது உடல் தொடர்பான இன்பம்.
GENERATE - உருவாக்கு, உற்பத்தி செய்.
SELF RELIANT - தன் நம்பிக்கை, தற்சார்பு.



குறள் இல: 228 இன் விளக்கம். பொருளை ஈயாது பின்பு இழக்கும் அருள் இல்லாதார், ஏழைகட்குக் கொடுத்து, அவர்கள் மகிழ்தலால் அருளாளர் அடையும் இன்பத்தைக் கண்டறியாரோ?

மேலே கூறப்பட்ட வாழ்க்கை நெறியை முழுமையாகக் கடைப்பிடிப்பவனே போற்றுதற்குரியவன். உண்மையான கொடைவள்ளலாக வாழ்ந்தால் எமக்கு இடர் ஏற்படும் பொழுது எம்மை அறியாமலே நாம் எண்ணியும் பார்க்காத ஒருவரிடமிருந்தோ அல்லது அவ்வாறான ஓர் வழியிலிருந்தோ எமக்குத் தேவையான உதவி எம்மைத் தேடிவரும். இதை அனுபவத்தினால் மட்டுமே பட்டுணரலாம்.

நீங்கள் முற்று முழுதாக இன்றே நெறியாளராகவும் கொடைவள்ளலாகவும் ஆகும் படி வலியுறுத்தவில்லை படிப்படியாக வள்ளலாகும் பாதையில் இன்றிலிருந்தே செயல்பட்டு வலுவற்றிருப்பவர்களுக்கு உதவும் அதேவேளையில் உங்கள் வாழ்வையும் வளப்படுத்தும் கடும் உழைப்பில் ஈடுபடுங்கள். இவ்வாறு வளமுள்ளவர்கள் தொண்டாற்றுவதன் மூலம் நாமும் நாடும் வளம் பெறலாம் என்பது திண்ணம்.

**மொழி பெயர்ப்பு, கருத்துருவாக்கம்**
**-காங்கேயதிருமலைவன்னியான்-**

## புகழ் பெறவேண்டுமென்ற வெறி!

"புகழ் பெறவேண்டுமென்ற வெறி உணர்ச்சிதான் வாழ்க்கையில் மகத்தான துணிச்சலை உண்டாக்கி உலகம் பிரமிக்கும் அளவு தொழில் துறையில் முன்னேற எனக்கு உற்சாகம் தந்தது". **கோடீஸ்வரர் ரொக்பெல்லர்.**

# அன்பு(ம்)
# அறிவு(ம்)
# வீரம்(மும்)
# ஓங்குக!

இது எமது சஞ்சிகையின் மகுடவாக்கியமாகும்.

1. அன்பு )
2. அறிவு )
3. வீரம் )
4. அன்பும் அறிவும் வீரமும் ஓங்குக )

இந்தத் தலைப்புக்களில் தனித்தனியாக ஆய்வுக் கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன

- பரிசைத் தட்டிக் கொள்வதற்காக விடயத்தேனை. ஆவண மலர்களில் திரட்டுவதற்காக இன்றே தேனியாகி செயற்படுங்கள்!
- பரிசைப் பெறும் செயல்வீரனாகுங்கள்!
- நீங்களும் வளர்ந்து சமுதாயத்தையும் வளப்படுத்துங்கள்!
- நடைமுறை விளக்கம் கீழே.

-ஆசிரியர்-

## ஆய்வுக்கட்டுரைப் போட்டி

விடயத் தலைப்பு — 1. அன்பு
2. அறிவு
3. வீரம்
4. அன்பும் அறிவும் வீரமும் ஓங்குக.

❖ மேற்குறிப்பிட்ட 04 தலைப்புகளிலும் தனித்தனிக் கட்டுரைப் போட்டி வரிசைக் கிரமமாக நடாத்தப்படும்.

❖ முதல் தலைப்புக்கான கட்டுரை கன்னி சஞ்சிகை வெளியிட்டு மூன்றாவது மாத இறுதி நாளுக்கு பிந்தாது எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவத் தபாலில் அனுப்ப வேண்டும். இரண்டாவது |அறிவுக்கதிர்| சஞ்சிகை வெளியிட்டு 3ம் மாத முடிவு நாளுக்கு பிந்தாது 2ம் விடயத் தலைப்புகான கட்டுரை எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படவேண்டும். இந்த நடைமுறை 3ம், 4ம் விடயத் தலைப்புக்களுக்கும் கைக்கொள்ளப்படும்.

❖ முதல் பரிசு பெறும் 1ம் விடயத் தலைப்புக்கான கட்டுரை எமது இரண்டாவது இதழிலும். 2ம் விடயத்தலைப்புக்கான கட்டுரை எமது மூன்றாம் இதழிலும் பிரசுரிக்கப்படும். இந்த நடைமுறை அடுத்த இரண்டு விடயத் தலைப்புகளுக்கும் கடைப்பிடிக்கப்படும்.

- ❖ கட்டுரைகளில் குறிக்கப்படும் எடுகோள்கள் மற்றும் விடயங்களுக்கான உசாத்துணை நூல்களின் பெயரையும், நூலாசிரியரின் பெயரையும் படைப்பாளி பட்டியலிட்டு அதை கையொப்பமிட்டு உறுதி செய்து கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ❖ வயது வேறுபாடின்றி எவரும் கலந்து கொள்ளலாம்.
- ❖ ஒருவர் ஒரு விடயத்திற்கு ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம்.
- ❖ குறித்த தலைப்புக்காக வெளியிடப்படும் நுழைவு அட்டையை வெட்டி எடுத்து கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். நுழைவு அட்டை இணைக்காத கட்டுரை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ❖ கட்டுரையுடன் நுழைவுக் கட்டணமாக ரூபா 25.00 ற்குரிய காசுக்கட்டளை, தபாற்கட்டளை/ காசோலை மட்டும் எமது வங்கிக்கணக்கு "அறிவுக்கதிர்", மக்கள் வங்கி, முல்லைத்தீவு, சே.க.இல: 25800 ற்கு அனுப்ப வேண்டும்.
- ❖ கட்டுரையுடன் படைப்பாளி தனது முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, இடம், கல்வித்தகைமை, தொழில், படைப்புத்துறை அனுபவ விபரம், ஆர்வமுள்ள துறை, வங்கிக்கணக்கு இருப்பின் கணக்கு இலக்க விபரம், தொலைபேசி இலக்கம், குறிப்பிட விரும்பும் ஏதேனும் தகவல் (மிகச்சுருக்கமாக) போன்றவற்றை ஒரு தாளில் நிரப்பி கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும்.
- ❖ நடுவர் முடிவு இறுதியானது.
- ❖ முதல் பரிசு ரூபா 1000.00 மட்டும்.
- ❖ இரண்டாம் பரிசு 6 இதழ்கள் இலவசம்.
- ❖ மூன்றாம் பரிசு 3 இதழ்கள் இலவசம்.


குறிப்பு:- 1வது, 2வது விடயங்களுக்கான கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## அதிகாலையில் எழுவதன் நற்பயன்கள்

அதிகாலையில் எழுவது இரத்த ஓட்டத்தை தீவிரமடையச் செய்கின்றது. புத்துணர்ச்சி, சுறுசுறுப்பு உண்டாக மூளை தெளிவடைந்து, அறிவாற்றல் சீராக வளர்ச்சியடைகின்றது. ஜீரண உறுப்புக்கள் ஒழுங்காக செய்ற்படும். எழுந்ததும் குளிர்ந்த நீர் அருந்தினால் இரவு முழுவதும் தொடர்ந்து கடுமையாக செயற்பட்டதனால் சூடேறியுள்ள வயிற்று



உறுப்புக்கள் குளிர்ச்சியடைந்து, வயிற்றுக்குள் உள்ள அமிலங்கள் சமநிலையடைவதுடன், இலகுவாக மலம் கழியும். சில நிமிடங்கள் காலைச் சூரியனை பார்ப்பதனால்



கண்களில் தெளிவும், தீட்சண்யமும் தோன்றும். அந்தநாள் முழுவதும் நீங்கள் தேனீ அல்லது எறும்பு போன்று மிக உற்சாகத்துடன் கருமமாற்றி நற்பயன் பலபெறலாம்

- அறிவூட்டும் அபூர்வச் செய்திகள் 2000

**ஆராய்ச்சி என்பது விஞ்ஞான ஆராய்ச்சி மட்டும்தானா?**
**இல்லை**
**குப்பையைக் கிளறியும் ஆராய்ச்சி நடைபெறுகின்றது!**
**அறிவு வளர்ச்சிக்கு**
**கீழேயுள்ள குப்பையைக் கிளறி முத்தெடுத்து பயனடையுங்கள்**

# குப்பைகளைக் கிளறுவதால் பயனுண்டா?

-வேலவன்-

'குப்பைகளைக் கிளறுவது......' என்பது பெரும்பாலும் எவருக்குமே ஒரு பிடித்தமான செயலன்று, இரண்டு வகையிலும் ஒரு வகையில் எமக்கு விருப்பமில்லாத பழைய விடயங் களைக் கதைப்பது அல்லது நினைப் பது இதனால் எதுவித பயனும் விளையப்போவதில்லை என்பதுடன் நேர வீணடிப்பாகவே இருக்கும்.

மற்றொரு வகையில் வீட்டிலுள்ள குப்பைகளைக் கிளறு வதிலும் எவரும் விருப்பம் கொள் வதில்லை. வேண்டாதவை என்று எறிந்த பின் அங்கே கிளறிப் பார்க்க என்னதான் இருக்கப் போகிறது?

ஆனால் தெருத் தெருவாகப் போடப்படும் குப்பைகளை எடுத்துச் சென்று அவற்றைக் கிளறி, அவற்றுக்குள் இருக்கும் பொருட் களை வகைப்படுத்திப் பல பயன்தரும் முடிவுகளைப் பெறுகின்றனர், ஒரு சமூகவியல் ஆராய்ச்சிக் குழுவினர். அமெரிக்காவிலேயே இவ்வாறான தொரு குழு இயங்கி வருகின்றது.

இவர்கள் அங்கு பைகளி லே கட்டிக் குப்பைத் தொட்டிகளில் போடப்படும் குப்பைகளை, தெருத் தெருவாகத் திரிந்து சேகரித்து அவற்றை பக்குவமாக எடுத்துச் சென்று அவற்றை வகை வகையாகப் பிரித்து, ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின் றனர். இதன் மூலம் அப்பகுதியில் வசிப்பவர்கள் சமூக பொருளாதார வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள முடியும் என்பது இவர்களின் முடிவு.

உதாரணமாக வீசப்படும் மீதமான உணவுப்பொருட்கள், மரக் கறி கழிவுகள், உணவு அடைத்து வந்த வெற்றுத்தகரங்கள், வெற்றுப் பைகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு, அப்பகுதி மக்களின் உணவு பழக்க வழக்கங்களையும், அவர்களது பொருளாதார நிலமை களையும், அறிந்து கொள்ள முடியும். இவ்வாறே ஏனைய பாவனைப் பொருட்களின் வெற்று கொள்கலன் கள், பெட்டிகள் போன்ற பொருட் களும் இவ்வாறு அவர்களின் வாழ்க் கை முறைகளைப் புலப்படுத்த கூடிய வையாகும். உதாரணமாக பற்பசை, பற்தூரிகை, சவர்க்கார வகைகள், ஒப்பனைப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், சவர அலகுகள், இவ்வாறு அன்றாடம் பாவிக்கப்படும் பொருட்களின் வெற்றுக் கொள்கலன் கள், போத்தல்கள் என்பன அவர்க ளால் பாவிக்கப்படும் பொருட்களின் பட்டியலை இலகுவில் அறிந்து கொள்ள உதவுகின்றன.

அறிவுக்கதிர்

இவ்வாறு பகுதி பகுதியாகப் பிரித்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படும் கணிப்பீடு மக்களின் பொருளா தார நிலை, வாழ்க்கை முறை, மாதா ந்தம் உபயோகிக்கும் பொருட்களின் அளவு எனப்பல விடயங்களைக் கண்டு கொள்ள உதவுகின்றது.

இந்த ஆராய்ச்சியானது பெரும் வர்த்தக நிறுவனங்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது வர்த்தக நிறுவனங்கள் தமது உற்பத்திகளில் எவ்வளவு தொகையை மக்கள் நுகருகின்றனர் என்பதை அறிய இது உதவுவது சிறிய விடயமே. இதனை விடப் பெரிய நன்மைகள் இந்த ஆராய்ச்சி மூலம் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உதாரணமாக சம்போ தயாரிக்கும் நிறுவனம் ஒன்று சிறிய சிறிய பக்கற்றுகளில் தனது தயாரிப்பை அடைந்து விற்பனைக்கு விட்டது. அவற்றின் வெற்றுப்பக் கற்றுகளை இவ்வாறு சேகரித்துப் பார்த்த போது பெரும்பாலான வெற்றுபைக்கற்றுகளில் சிறிதளவு சம்போ மிகுதியாக இருக்கக் காணப்பட்டது. இதனையடுத்து அந்த நிறுவனம் சம்போவின் அளவைக் குறைத்து அடைத்து விலையையும் குறைத்ததன் மூலம் பாவனையா ளரின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டது.

தலைக்குப் பூசும் எண் ணெய் வகையொன்றைத் தயாரித்த ஒரு நிறுவனம், இவ்வாறு சேகரித்த வெற்றுப் போத்தல்களி லிருந்து தனது தயாரிப்பானது ஒரு பிரதேசத்தில் மட்டும் உறைந்து அடிப்பாகத்தில் தங்கி விடுவதை அவதானித்தது. பின்னர் அவ்வாறு உறைந்து விடாதிருக்க மாற்று வழியைக் கண்டு பிடித்தது.

இவை ஒருபுறமிருக்க உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள் முதல் சாதாரண மருந்துகள்வரை குப்பைகளில் பலராலும் வீசப்படு வதை ஆராய்ச்சியில் ஈடுபட்ட அமை ப்பு கண்டறிந்தது அதாவது நோய் குணமாகியதும் பெரும்பாலானோர் மீதியாக இருக்கும் பெறுமதிமிக்க மருந்துப் பொருட்களை வீசி வந்தனர். இவற்றின் பெறுமதியைக் கணக்கிட்டு மலைத்துப்போன அவ்வமைப்பு இவற்றைக் குப்பைக்குள் வீசி விடாது சேகரிக்க ஆங்காங்கே பெட்டிகளைப் பொருத்தியது. அதன் மூலம் பெறப்பட்ட மருந்துப் பொருட்கள் பல வறிய மக்களுக்கு உதவியது.

இவ்வாறு வீசி எறியப்படும் பொருட்களின் பட்டியலில் பெறுமதி வாய்ந்த புத்தகங்கள்,சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறிய பழுதுகளுடன் கூடிய பல்வேறு உபகரணங்கள் முதலியன அடங்கியிருந்தன. அவற்றை இவ்வாறு வீசிவிடாது சேகரித்து ஏனையோருக்கு வழங்க அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

இந்தக் குப்பையை கிளறும் செயலால் பெற்ற பயன்பாட்டின் பட்டியல் இவ்வாறே தொடர்கிறது. எனவே இது ஒரு சாதாரண/ அருவருக்கத்தக்க/ பயனற்ற விடயமல்ல என்கிறது ஆராய்ச்சியில் முழுமூச்சாக இறங்கியுள்ள அந் நிறுவனம்.

**இப்படியும் ஆராய்ச்சி...**



# அன்பார்ந்த வாசகர்களே!

எமது சஞ்சிகைக்கு அறிவியல் சார்ந்த அனைத்து விடயங்களிலும் ஆய்வுக்கட்டுரைகள், ஆக்கங்கள், கருத்துருவாக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.


படைப்புக்களை தயாரிக்கும்பொழுது கருத்திற் கொள்ள வேண்டியவை:

- படம் ஏதும் சமர்ப்பிக்கப்படாது தயாரிக்கப்படும் ஆக்கங்கள் 500 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

  (படங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அதன் அளவு சொற்கள் குறைக்கப்பட வேண்டும்.)

- பழைய விடயங்கள் ஆயின் சமகால வாழ்வியலுடன் தொடர்பு படுத்தியும், சமகால அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள், படைப்புக்களாயும் இருத்தல் வேண்டும்.
- இலகு ஆங்கில மொழி நடையிலான ஆக்கங்கள் 500 சொற்களுக்கு உட்பட்டும் இருக்கலாம்.
- எமது நாட்டின் அரசியல் சார்ந்த கருத்துக்கள் தற்காலிகமாக தவிர்க்கப்பட்டுள்ளது.
- அறிவியல் சார் சிறுகதை, கவிதை, ஏற்றுக்கொள்ளப்படும். சிறுகதை 300 சொற்களும், கவிதை 100 சொற்களும்
- எமது பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் இருத்தி ஆரம்ப நிலையில் எமது சஞ்சிகையை காலாண்டு இதழாக வெளியிடவுள்ளோம். பொருத்தமான தரமான ஆய்வுக் கட்டுரைகளையும், படைப்புக்களையும், படைப்பாளிகளிடமிருந்து எமக்குக் கிடைக்கும் ஆக்கங்களின் எண்ணிக்கையையும், உள்வரும் வேகத்தையும் அடிப்படையாகக் கொண்டு எமது சஞ்சிகையை மாத இதழாகவும் வெளியிடுவதில் நாம் ஆர்வமாக உள்ளோம் என்பதை வாசக நெஞ்சங்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-



த.குருகுலராசா
தலைவர், அறிவுக்கதிர்
வலயக் கல்விப் பணிமனை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
இலங்கை.
*E-mail:arivukkathir@yahoo.co.uk*

-ஆசிரியர்-

1993ஆம்ஆண்டு யாழ்விஞ்ஞான சங்கம் அதன் வருடாந்த மாநாட்டில் ''கல்வி முறைமையில் சீராக்கத்தின் அவசியம்'' பற்றி ஆய்வு மேற் கொண்டது. ஆய்வில் வெளியிடப் பட்டதரவு அதிர்ச்சியூட்டுவதாக அமைந்தது.

''1.2% மாணவர்களே பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப் படுகையில் 98.8% மாணவர்கள் எந்த வித தொழில் வாய்ப்புமின்றி அவலப் படுகின்றனர்''என்பதே அதுவாகும்.

இவ்விடயத்தில் வேறும் சில ஆய்வு கமிசன்களின் அறிக்கை களையும் கருத்தில் எடுத்து யாழ் துணைவேந்தர் திரு.அ.துரைராஜா மேற்குறிப்பிட்ட விடயத்தலைப்பில் வெளியிட்ட முடிவு ''கல்வியைப் பெறும் உரிமை அடிப்படையான ஒன்றாகும். கல்விக்கான வசதி வாய்ப்புக்கள் மக்களின் அபிலாசை களை வழங்கக் கூடியதாகவும், விரிவுப்படுத்தப்பட வேண்டும்.'' என்பதாகும்.

இந்த உரிமையையும், கோட் பாட்டையும் மையமாகக் கொண்டு இந்த மேதை எவ்வாறு ''பல்கலைக் கழகம் என்பது தங்கக் கோபுரம்'' என்ற நிலையை மாற்றி ''பல்கலைக் கழகம் பாமர மக்களை நோக்கி நகரவும், பல்கலைக்கழக அனுமதி மறுக்கப் பட்டவர்களை பல்கலைக் கழகத்திற்குள் ''அறிவு'' வளர்ச்சிக் காக உள்வாங்கி அறிவூட்டவும் தொண்டாற்றினார் என்பதை, இப்மேதையின் வாழ்வை ஆய்வு செய்யும் இக்கட்டுரை மூலம் அறிவோம்.

# சாதனையாளர் வரிசையில் மேதை இவர் யாவர்?

பகுதி - I

**நல்லவராகவும், வல்லவராகவும்...**

[illegible] இந்த மேதையின் சிறப்பியல்புகள் பற்றி இதயங்கள் பேசுவதைப் பார்ப்போம்.

## இறைவன் படைப்பு:-

♦ ..........HE WAS GOD SENT FOR JAFFNA......... (அவர் யாழ்ப்பாணத்திற்கு இறைவனால் அனுப்பப்பட்டவர்)

பேராசிரியர்.
எஸ். பாலச்சந்திரன்
தலைவர், சரித்திரப்பகுதி.

## இறைவன் பரமேஸ்வரனும் துணைவேந்தர் துரையும்.

♦ .......... எங்கள் வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் கோவிலுக்குச் செல்வதும் துணை வேந்தரின் அலுவலகத்திற்குச் செல்வதும் ஒன்றாயிருந்தது. ஆம்! அங்கு வாய்பேசாது அருளும் ஆண்டவர், இங்கு அளவளாவி அருளும் ஆண்டவர் எங்கள் துணைவேந்தர்...........

உமாபதி
தாமோதரம்பிள்ளை
மருத்துவபீடம்.

## தேசியச்சின்னம்.

♦ ......TAMILS AND SINHA-LESE FOUND THIS MAN, A

GREAT POTENTIAL FOR PEACE. HE WAS TRUELY A NATIONAL FIGURE.

(தமிழர்களும் சிங்களவர்களும் இந்த மனிதனிடத்தில் சமாதானத்திற்கான அபாரமான உள்ளூரவுள்ள வல்லமையைக் கண்டார்கள். அவர் உண்மையில் ஒரு தேசியச் சின்னம்.......) -

பேராசிரியர்
க.சிவதம்பி.

## பொருளாதார விருத்தி

♦ (....பொருளாதார அபிவிருத்திக்காக அவர் இயற்கை வளங்களாகிய கடல் வளம், வனவளம், நீர்வளம், தாவரம், தாவர உற்பத்திப் பொருட்களையும் விருத்தி செய்ய விரும்பினார்..........)

- யாழ் விஞ்ஞானசங்கம்.

## விலைமதிப்பிட முடியாதவர்

♦ அவரின் வாழ்க்கை ஒரு புனித யாத்திரை நோக்கத்துடன் துணிகரமான பிரயாணமாக இருந்தது, அவரின் பிறப்புப் பூரணமானது. அவரின் வளர்ச்சி மகத்தானது, அவர் கடமை யாற்றிய ஒவ்வொரு வழியும் ஒவ்வொரு பாதையாக மாறியது. அவரை சந்தித்த ஒவ்வொரு மனிதராலும் அவர்கவரப்பட்டார். அவர் அணுகிய இடம் மனித திறமையின் மலை உச்சியாக மாறியது. அவரின் புகழ் எந்த உலகப்பற்றுள்ள அதிகாரத்திலிருந்தோ செல்வத்தின் மினுமினுப்பில் இருந்தோ அல்ல ஆனால் அவரின் தூய்மை, அமைதி, எளிமை, தன்னலமற்ற பொறுப்பு ஆகியவற்றை அவர் அனுசரித்தமையினாலேயாகும். இப்போதைய நாட்களில் மனிதனுடைய பெறுமதி பொதுவாய் புரியப்படுகின்றதால் வெற்றியுள்ள மனிதர் என்று கூறுவதைவிட விலை மதிக்க முடியாத மனிதர் என்று கூறுவது சாலப் பொருத்தமாகும்.........

- பேராசிரியர்
துரைராஜா ஞாபகார்த்தக்
குழு, கொழும்பு.

"BLOWING ONE'S OWN TRUMPET" (தன்னைப்பற்றி பறை சாற்றுபவன்) மேலே கூறப்பட்டவை இப்படியான பறைசாற்றலா? இல்லை! இல்லை!! இதயங்கள் பேசுகின்றன அவை சத்தியத்தைக் கூறுகின்றன.

கதை முடிந்து விட்டதா? இல்லை, இனித்தான் கதையே ஆரம்பிக்கப் போகின்றது.

நாங்கள் பிறக்கின்றோம், உண்டு, களித்து, உறங்கி இறுதியில் இறக்கின்றோம். பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்டகாலம் வாழ்க்கை எனப்படுகின்றது. இது மிருகங்களுக்கும் பொருந்தும். மனிதர் என்றழைக்கப் படுகின்றவர்களில் அநேகர் சுயநல அடிப்படையில் உருவாகிய குடும்ப நலத்தை இலக்காகக் கொண்டு வாழ்க்கைப் பாதையை அமைக்கிறார்கள்; ஒரு சிலர் வட்டத்தைப் பெரிதாக்கி சமூக நலனைக் கருத்திற் கொண்டு வாழ்கின்றார்கள்; சிலர் தேசத்தின் நலன் கருதி தம்மை அர்ப்பணித்து வாழ்கின்றார்கள்; இன்னும் சிலர் மனித குலமேம்பாட்டிற்காக மேற்கூறிய வட்டங்களுக்கு அப்பால் சென்று வாழ்கின்றனர்.

இவ்வாறு வாழ்ந்தவரே

எமது பிரதான கட்டுரையின் நாயகன் பேராசிரியர் திரு. அ. துரைராஜா.

### குடும்பவாழ்வு

மேற்கூறியவற்றை தன் ஆன்மாவில் கொண்டிருந்த அருமையான குழந்தையை தமது சிரேஷ்ட புதல்வனாக அழகையா செல்லம்மா தம்பதியினர் 10.11.1934ல் பெற்றெடுத்தனர். தம்பிள்ளை மேதை என்பதை அன்றுஅவர்கள் அறிந்திலர். பல்கலைக் கழகத்தில் தனது சக நண்பனான திரு. அ.சற்குணநாதன் தனது சகோதரியை திருமணம் செய்யும் படி வேண்டிய பொழுது அதை ஏற்று திரு. திருமதி. சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை ஆகியோரின் புதல்வியான வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட Bsc பட்டதாரி செல்வி. இராஜேஸ்வரியை 1967-04-20ஆம் திகதி இல்லத்தரசியாக திரு.அ. துரைராஜா ஏற்றுக் கொண்டார். திருமணத்தின் முன் திரு. துரைராஜா முன்வைத்த நிபந்தனையை ஏற்று செல்வி.இராஜேஸ்வரி தனது ஆசிரியப் பணியைத் துறந்து குடும்ப நிர்வாகத்தின் அரசியானார்.



திரு.அ. துரைராஜா

இவர்களது சிரேஷ்ட புதல்வன் சிவகுமார் ஏழுவயதில் இறந்தான். இது அவருடைய மனதைப் பெரிதும் பாதித்த விடயமாகும்.



திருமதி. து. இராஜேஸ்வரி

இவர்களின் ஏனைய பிள்ளைகளின் விபரம் வருமாறு:-

1. மகள்
திருமதி சிவதாசன் அகிலா:-
Bsc - (Eng)
Studying Msc in California
-ஒரு பெண் குழந்தைக்குத் தாய்.

2. மகள்
திருமதி சபேசன் கவிதா
Bsc Hons. (Computer). CIMA
விரிவுரையாளராக பேராதனையில் கடமையாற்றினார்.

3. மகள்
செல்வி. து. புனிதா
MBBS 5 ஆம் ஆண்டு - ரஷ்யா

4. மகன்
செல்வன் து. அரவிந்தன்
Engineering (Civil) பேராதனை இறுதி ஆண்டு.

5. மகன்
செல்வன் து. அழகேஸ்வரன்
க.பொ.த(உ.த)கணிதம் இறுதிஆண்டு.

குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் அ.துரைராஜா அவர்களுடன் தொடர்புபட்ட சம்பவங்க

ளென்று அவரின் வாழ்க்கைத் துணைவி எங்களுடன் பகிர்ந்து கொண்ட விடயங்களில் சமூகத்திற் கும் பயன்படும் என்று நாம் கருதும் சிலவற்றை இங்கு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

**சேவை:**

♦ சம்பளம் வழங்கும் நிறுவனத் திற்கு 100% சேவை செய்ய வேண்டும் என்று கூறுவார். அதன் படியே வாழ்ந்தும் காட்டினார்.

♦ பல்கலைக்கழகம் அவர் உலகம்; மாணவர்கள் அவர் பிள்ளைகள்; அவர்கள் பிரச்சனைகள் அனைத்தயையும் தீர்க்கும் பொறுப்பு தன்னுடையது என்று கூறுவார்.

♦ ஒரு சிங்கள மாணவன் மனம் பாதிக்கப்பட்டு, படிப்பை விட்டுப் போக இருந்தான். அவனுக்கு ஆலோசனை கூறி தன்னுடன் பரிசோதனைக் கூடத்தில் வைத்திருந்து படிப்பில் ஆர்வத்தை உண்டாக்கியதால் அவன் நல்ல நிலை அடைந்து படிப்பைத் தொடர்ந்து பொறியியலாளரானான். எங்கு துரையை சந்தித்தாலும் நன்றி யுணர்வின் காரணமாக சாஸ்டாங்க மாக வீழ்ந்து வணங்குவான்.

♦ 1971ல் ஜே.வீ.பி கலவரகாலத் தில் சிங்கள மாணவனுக்கு, விடுதி யில் வயிற்றோட்டம் ஏற்பட்டது. எவரும் வாகனம் கொடுக்க மறுத்து விட்ட பொழுது ஆபத்தைப் பொருட் படுத்தாது தனது 404 பேஜோ காரில் அவனை வீட்டிற்கு அனுப்பி வைத்து பெற்றோரின் வயிற்றில் பாலை வார்த்தார்.

**குடும்ப உறவு**

♦ ''அவர் விருப்பத்தை ஏற்று திருமணத்தின் முன்பே நான் எனது ஆசிரியைத் தொழிலைத் துறந்ததால் முழுமையாக எமது பிள்ளைகள் அனைவரையும் நல்ல நிலைக்கு உயர்த்தி, நற்பிரசைகளாக்கி, கணவனின் முழுமையான சேவைக் கும் அவருக்கும் உறுதுணையா யிருந்தேன். இதுவே எனக்கு முழு மையான ஆத்ம திருப்தி அளித்தது.

♦ ''நீர்வேலி மருத்துவமனைக்கு கட்டிடம் அமைப்பதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து எனக்கு பல நெருக்கடிகளும் ஏற்பட்டது. அவர் எதிர் கொண்ட பிரச்சனைகளை எவ்வாறு உறுதியுட னிருந்து செயலாற்றி வெற்றி கண்டாரோ, நானும் அவ்வழி நின்று எனக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை உறுதியுடன் எதிர்கொண்டு வெற்றி கண்டேன்.

♦ ''பிள்ளைகளைத் திருத்த வேண்டும் என்று என்மனதில் பட்ட போதெல்லாம், விடயத்தை அவரிட மே ஒப்படைத்து விடுவேன், அமைதி யோடு அனைத்தையும் கேட்பார்; சம்பந்தப்பட்ட பிள்ளையோடு அறைக் குள் சென்று விடுவார். பூட்டிய கதவின் பின்னால், என்ன நடந்தது என்ற உண்மையை நான் நீண்ட காலத்தின் பின்பே அறிந்து கொள்ள முடிந்தது.

''தவறு செய்த பிள்ளை களுக்கு அடித்தே திருத்தினார் என்ற எனது எண்ணம் தவறு என்பதையும், தலையணைக்கு பிள்ளைக்கடிப்பது போன்று அடித்து உளவியல் வைத்தியம் செய்தார் என்பதையும் அவர்கள் வாயிலாக பல காலத்தின் பின் அறிந்தே ஆச்சரியப்பட்டதுடன் எனக்குள் சிரித்தும் கொண்டேன்."

(என்ன அன்னியோன்னியமான குடும்பம்; பார்த்தீர்களா?)

♦ ''பிள்ளைகளுக்கு பட்டம் கட்டிக் கொடுத்து பட்டத்தை ஏற்றியும் கொடுப்பார். பல பாரிய பொறுப்புக் களைச் சுமக்கும் ஒரு மேலாளர், வீட்டிலே அனைத்துப் பொதுச்சுமை களையும் மறந்து, தானும் பிள்ளை களில் ஒருவனாகி, அவர்கள் மன உணர்வுகளை நிறைவு செய்வதில் முழு அக்கறையுடன் செயற்பட்டார். என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக் காட்டும் தேவையா?

♦ ''பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் எல்லோரும் வீட்டுப் பிள்ளைகள் மாதிரி வந்து உணவருந்தி, ஆலோசனை பெற்றும், உதவி பெற்றும் செல்வார்கள். எமது வீடு அவர்களுக்கு தமது வீடுமாதிரி.

♦ ''குடும்ப வாழ்வில் எந்த விடயத் திலும் கூடிய புரிந்துணர்வு உடைய வர். விடயத்தை ஆர அமர, இருந் து நட்புறவுடன் உரையாடுவோம். பிள்ளைகளுடனும் அவ்வாறே நடந்து கொள்வார். எமக்குள் என்றும் பிணக்கு இருந்ததில்லை. அவர் முகபாவத்தின் மூலம் கருத்துணர்ந்து அவருக்கு விருப்பமில்லாத விடயத்தை நான் கைவிட்டு விடுவேன். இதனால் எமக்கிடையே உறவு வளர்ந்தது.

♦ ''எங்கு சென்றாலும் என்னை அவருடன் துணையாக அழைத்துச் செல்வார்.'' - இவை அவர் மனைவியின் கூற்றுக்கள்.

**விவசாய முயற்சி**

♦ எமது 20 பரப்புக் காணியில் தென்னை, பனை, ஏனைய பயன் தரும் மரங்களுண்டு. அவருக்கு தோட்டச் செய்கையில் நல்ல ஆர்வமு முண்டு. எனக்கும் தோட்டத்தில் நல்ல ஆர்வமும், பரிச்சயமுமுண்டு. ஆடு, மாடு, கோழி (83 கலவரத்தின் பின்) வளர்த்தோம். இருபோகத்திலும் தலா 15/20 அந்தர் வெங்காயம் செய்விப் பேன். இதைப்பார்த்து அவர் மகிழ்வடைவார்; வாழையுமுண்டு; காளானும் உற்பத்தி செய்தார். வளர்ப்பு ஆட்டுப் பாலை வீட்டிற்கு பயன் படுத்துவோம். எலுமிச்சம் காய் காலையில் மரத்தின்கீழ் கொட்டிக் கிடக்கும். வியாபாரிகள் வீட்டிற்கு வந்து உற்பத்திப் பொருட்களை வாங்கிச் செல்வார்கள். தோட்டச் செய்கையில் அனைவரும் ஈடுபடு வதையிட்டு பெருமையடைவார்.

♦ ஒடியல் பிட்டு, கீரைப்பிட்டு, கூழ் விரும்பி அருந்துவார்.

♦ போர்க்காலத்தில் பனங்களி காய விடுவதற்கு போர் போட்டுத் தருவார். அந்தப் பனாட்டை உண வாக அருந்துவோம்.

**சமய, பண்பாட்டு நடவடிக் கைகள்:-**

♦ செல்வச் சந்நிதி முருகனில் நல்ல பக்தி உடையவர். நேரமிருந் தால் வல்லிபுரக் கோவிலுக்கு ஞாயிற்றுக் கிழமையில் செல்வார். Phd க்கு செல்லும் வரை சந்நிதி கோவில் தேருக்கு அங்கப் பிரதட் சணை செய்வார். நாள் தோறும் வீட்டில் உள்ள அனைவரும் மாலை நேரத்தில் உடல் சுத்தம் செய்து வீட்டில் ஒன்றாகக் கூடி இறை வழிபாடு செய்வோம். வெளியில் தூரப்பயணம் செல்லும் பொழுது வீட்டிலுள்ள குல தெய்வத்தை வழிபட்டுச் செல்வார். அத்தெய்வத்

திற்கு வருடம் தோறும் பொங்குவார்.

♦ நாம் அனைவரும் இறை நம்பிக்கை உடையவர்கள். மகன் அரவிந்தன்; பேராதனை இந்து மாணவர் அமைப்பின் தலைவராக உள்ளான். இன்றும் கூட எமது பழக்கத்தின்படி இளைய மகன் அழகேஸ்வரன் காலையில் எழுந்து குளித்து இறை வழிபாடு செய்த பின்பே நீர் அருந்துவான்.

♦ அறிவதற்கு ஆச்சரியமாயிருக்கும், ஆனால் துரை தனது பிள்ளைகளுடன் இணைந்து வீட்டில் பாரம்பரிய கூத்துப்பாட்டு பாடுவது வழக்கம்.

### விருந்தோம்பல்:-

♦ பல்கலைக்கழகத்தால் வந்து காரிலிருந்து இறங்கும் பொழுது ஒரு புன்முறுவலுடன் வருவார். அதன் அர்த்தம் தன்னுடன் விருந்தாளிகளாக மாணவர்கள் அல்லது ஏனையோர் வந்துள்ளார்கள், அவர்களுக்கு உணவளித்து உபசரிக்க வேண்டுமென்பதாகும். அவர்களுக்கு உணவளித்து அனுப்பிவைப்பதில் அவர் பெருமகிழ்வடைவார். (கணவன் வழிநின்று 2003-06-18ம் திகதி இக்கட்டுரைக்கு நேர்காணச் சென்ற எனக்கும் திருமதி. து.இராஜேஸ்வரி தனது கையால் உணவு பரிமாறி மகிழ்ந்தார்)

## பகுதி - II

### கல்வி தொழில்சார் வளர்ச்சி:-

செல்வன் அ. துரைராஜா தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், பின் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றார்.

### பல்கலைக்கழகக் கல்வி:-

பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சையில் 1953ம் ஆண்டு அதியுயர் புள்ளிகளைப் பெற்று கொழும்பு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் அனுமதிக்கப் பட்டார். இறுதிப் பரீட்சையில் முதலாம் தரத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் பீட விரிவுரையா ளராக நியமிக்கப்பட்டார்.

### பட்டமேற்படிப்பு:-

இலங்கை பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்று, கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் மண் பொறியியல் துறையின் பேராசிரியர் கே.எச். றொஸ்கோவினால் துரையின் மேன்மையான திறமை அறியப்பட்டு துரையை ஆராய்ச்சி மாணவனாக அனுமதிக்கப்பட்டான். விரிவான ஆராய்ச்சியில் துரை ஈடுபட்டமையால் கலாநிதிப்பட்டம் கேம்பிரிச் பல்கலைக்கழகத்தால் வழங்கப் பட்டது.

பேராதனை, மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களால் இறப்பின் பின்னான கௌரவ விஞ்ஞான மேதைப் பட்டம் திரு. அ.துரைராஜா விற்கு வழங்கப்பட்டது. அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் இறப்பின் பின்னான விஞ்ஞான கலாநிதிப்பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

*HIS LONG CAREER BROUGHT HIM IN CONTACT WITH MANY INTELLECTUALS OF UNIVERSITY OF PERADENIYA, CAMBRIDGE UNIVERSITY, OPEN UNIVERSITY OF SRILANKA, UNIVERSITY OF WATERLOO, UNIVERSITY OF BRITISH COLUMBIA, CANADA AND UNIVERSITY OF JAFFNA. HE WAS WARMLY WELCOMED IN FOREIGN COUNTRIES, BUT HE SHUNNED ALL THESE INVITATIONS AND PREFERRED TO IMPART THE KNOWLEDGE AND EXPERIENCE TO YOUNGER GENERATION IN SRI LANKA.*

*அவருடைய நீண்ட கால தொழில் வாழ்வு யாழ் பல்கலைக்கழகம், கனடா பல்கலைக்கழகம், பிறிட்டிஷ் கொலம்பியாவின் பல்கலைக்கழகம், வட்டார்லூ பல் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கேம்பிறிச் பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பல கல்வி மான்களுடனான தொடர்பை ஏற்படுத்தியது. வெளிநாடுகள் அவரை அன்புடன் வரவேற்கத்தயாராக இருந்தன, ஆனால் அவர் அவ் அழைப்புக் களை புறந்தள்ளி விட்டு தனது அனுபவத் தையும், அறிவையும், இலங்கையி லுள்ள இளம் தலைமுறையினருக்கு வழங்குவ தையே விரும்பினார். (சாதாரண மனிதர் கள் இவ்வாறான அழைப்பை அழுங்குப் பிடியாகப் பற்றியிருப்பார்களல்லவா?)*

## தொழில்

**போதனாசிரியரான அவரது தொழில் சார் வாழ்வு கீழ்க்கண்டவாறு அமைந்தது:-**

♦ பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிவில் பொறியியல் துறையின் விரிவுரையாளராக நியமிக் கப்பட்டார்.

♦ 1958ல் பொது வேலைகள் திணைக்களத்தில் உதவி பொறியிய லாளராக நியமனம் பெற்றார்.

♦ 1962ல் இலங்கை பல்கலைக் கழகத்தில் சிவில் பொறியியல் துறையின் விரிவுரையாளராக இணைந்தார்.

♦ திருமணத்தின் பின் 1969 கனடா வாட்டலூ பல்கலைக்கழகத்தில் ஒரு வருடம் விரிவுரையாளராகச் சேவை செய்தார்.

♦ 1971ல் இலங்கை வந்த அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் துறையின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

♦ அதே பீடத்தின் பீடாதிபதியானார்.

♦ கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில், 1977 - 1979 வரை விடுமுறையில் சென்றிருந்த பொழுது விருந்தினரென்ற நிலையில் பேராசிரியர் பணி செய்தார்.

♦ மீண்டும் 1979 தையில் இலங் கை திரும்பி பேராதனை பல்க லைக்கழகத்தின் சிவில் பொறியியல் பேராசிரியராயும் அதனைத் தொடர்ந் து அதே பீடத்தின் பீடாதிபதியுமானார்

♦ 1985ல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் பேராசிரியரானார். இதன் பின் அதே பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியாகநியமிக்கப்பட்டார்.

♦ யாழ் பல்கலைக்கழகம் மிக ஆபத்தான சூழ்நிலைக்குள் சிக்கி மூடப்படும் அபாயம் நிலவிய வேளையில் அதன் மீட்பராக துணை வேந்தர் பணியை ஏற்றுக் கொண்டார்.

துணைவேந்தருக்கான 2வது தவணைக் காலம் முடிவடைவதற்கு முன் உடல் நலக்குறைவின் காரணமாக 1994ல் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

♦ இதனைத் தொடர்ந்து அவர் திறந்த பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் பீடத்தின் பேராசிரியரானார். இதுவே அவரது இறுதிப்பணியாக அமைந்தது.

## பகுதி - III
## "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"
### பல்கலைக்கழகம், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் நலன் பேணலில்.......

**பல்கலைக்கழக நலனில்:-**

♦ நாட்டில் 83 கறுப்பு ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்து அதிலிருந்து வந்த உள்ளூர் சிவில்



பட்டமளிப்பு விழாவிற்காக துணைவேந்தர் திரு.அ. துரைராசா உத்தியோக தோரணையில் அழைத்து வரப்படுகின்றார்.

யுத்தத்தின் விளைவாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து புத்த ஜீவிகளும், வசதிப்படைத்தவர்களும் நாட்டினதும், மக்களினதும் நலன்களை பின்தள்ளி விட்டு, தமது சுயநலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தெற்கு நோக்கியும், ஐரோப்பிய நாடுகளை நோக்கியும் நகர்ந்த வேளையில், யாழ் பல்கலைக்கழகம் மூடப்படும் பேராபத்தான நிலை தோன்றிய நிலையில் சுயநலத்தை இதயத்தின் ஆழத்தில் புதைத்து அதற்குச் சாவுமணி அடித்து விட்டு, பல்கலைக்கழகத்தின் நலனையும், சமூக நலனையும், தமிழீழத்தின் நலனையும் தனது அடிப்படை நலனாக வரித்துக் கொண்டு தெற்கிலிருந்து சுயவிருப்பில் யாழ் பல்கலைக்கழகம் நோக்கி அதன் துணைவேந்தர் நியமனத்தை ஏற்று திரு.அ. துரைராசா நகர்ந்தார் இதனால் பல்லாயிரக்காணக்கான கல்வி மான்களின் தற்கால வாழ்வும் வளமும் பாதுகாக்கப்பட்டது என்பதை இவ்விடத்தில் அழுத்திக் கூற வேண்டியுள்ளது.

**மாணவர் நலன்:-**

மாணவர்களின் நலனே அவரின் தலையாய அக்கறையாயிருந்தது. துணைவேந்தர் என்ற நிலையில் அவர் நிர்வாகப் பிரச்சனைகள் உட்பட, அரசியல் பிரச்சனைகளுக்கும் உறுதியுடனும் இராஜதந்திரத்துடனும் முகம் கொடுத்தார். இதன் உச்சக்கட்டமாக இரு மாணவர்கள் அமைதிகாக்க வந்த இந்திய இராணுவத்தால் வளாகத்தின் துழைவாயிலில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அமைந்தது. இந்தத் துயரம் அவரை ஆட்டம் காணச் செய்யவோ, அல்லது வல்லமையற்றவராகவோ

ஆக்கவில்லை. மாறாக அவர் மாணவர்களின் கல்வி சார் விடயங்களிலும், வதிவிடப் பிரச்சனைகளிலும் தீவிரத்துடன் செயற்பட்டு தீர்த்து வைத்தார்.

1983ல் தடைசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர் அமைப்பை 1988ல் சனாதிபதியின் அனுமதி பெற்று முன்பில்லாதவாறு ஒவ்வொரு பீடத்திற்கும் தனித்தனி அமைப்பையும், பல்கலைக்கழகத்திற்கு தனித்துவமான பொது மாணவர் அமைப்பையும் உருவாக்கினார்.

> ''நாங்கள் மாணவர்களின் கோரிக்கைகளை முன்வைத்து போராட வேகமாய், உணர்ச்சிப் பிளம்புகளாய் துணைவேந்தர் அறையை நாடிய போதெல்லாம் ஏனோ அந்த இன்முகத்தைக் கண்டதும் அமைதியடைந்து விடுவோம். நிச்சயம் வெற்றியுடன் தான் எம்மை வழியனுப்புவார். அந்த வரவேற்கும் பண்பு, பேச்சாற்றலோ, அன்றி முகராசியோ இன்று வரை யாமறியோம். எது எம்மை அவரிடத்தில் அடிமைப்படுத்தியது என்று?" -
> **மாணவ இதயங்களின் குரல்**

### துணைவேந்தர் நலன்புரி நிதியம்


போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக 1988ல் அவர், ''**துணைவேந்தர் நலன்புரி நிதியத்தை**'' ஆரம்பித்தார். வருடாந்தம் 200 மாணவர்கள் இந்த நிதியத்தின் மூலம் பயனடைகின்றனர். வெளிநாடுகளிலுள்ள நலன் விரும்பிகளிடமிருந்து பெற்ற நன்கொடையைக் கொண்டு வருடாந்தம் 15 அநாதை மாணவர்கள் பயனடைகின்றனர்.

### திறமையின் உண்மைச் சொரூபம்.

அவரிடத்தில் காணப்பட்ட கவனத்தை ஈர்க்கும் குணதிசயம் நேரம் தவறாத தன்மையாகும். PROMPTNESS எப்பொழுதும் நேரத்தைப் பேணுவார். நேரத்தைப் பேணும் உணர்வில் மிகவும் தீவிரமானவர். யாழ்ப்பாணத்தில் நிலவிய போக்கு வரவு வசதியீனம், மற்றும் தொடர்பாடல் பிரச்சனைகள் நிலவிய வேளைகளில் மக்கள் நேரத்தை அனுசரிக்காத நிலையிலும், பேராசிரியர் துரைராசா சந்திப்புக்கள், கூட்டங்களுக்கு, நேரத்தைப் பேணுவதில் தீவிரமான முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

அவர் உறுதியளித்ததை நிறைவேற்றினார். தன்னால் செய்யக்கூடிய பொறுப்புக்கள் எதுவானாலும், அதை ஏற்றுக் கொண்டார். ஏற்றுக் கொண்டது எவ்வளவு கடினமானதாயிருப்பினும் அதை அவர் கண்டிப்பாக நிறைவேற்றினார். வேறு எவராலும் நிறைவேற்ற முடியாததை அவரிடம் ஒப்படைத்தால், அதை அவர் திருப்தி கரமாக நிறைவேற்றுவார் என்பதில் எவரும் நம்பிக்கையுடனிருந்தார்கள்.

விடயங்களை அவர் பார்க்கும் வழியின் சித்தாந்தத்தில், உண்மை நிலையை அப்படியே ஏற்றுக் கொள்வதுடன் சூழ்நிலைகள் ஏற்றுக் கொள்ளும் வாறே அவற்றை தொடர்ந்து கையாள முயற்சிப்பதாகும். தன்னைச் சூழவுள்ள



பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கூடத்தில் 'துரை'

உலகத்தை அவர் மாற்ற முற்படவில்லை, என்பதுவல்ல இதன் அர்த்தம், ஆனால் அதுவரை காத்திருக்காது, அவ்வேளையில் எதைச் செய்ய முடியுமோ, அதை செய்து முடித்தார்.

அவருடைய ஆய்வு நுட்பமும் திட்பமும் ''துரையின் கோட்பாடு'' (THURAi'S THEORY) என்று அறிவியல் உலகம் அங்கீகரிக்கும் அளவுக்கு மேன்மை பெற்றது. இக்கோட்பாடு மேலைத்தேய பல்கலைக்கழகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தேசிய, சமூக வாதியாக.**

1990ஆம் ஆண்டு போரின் விளைவால் வடக்கில் பிரயாண சேவை சீர் குலைந்தது. துணை வேந்தரென்ற தோரணையில் தனக்கென விசேட பிரயாண வசதியை ஏற்படுத்தித்தரும்படி நிர்வாகத்திடம் கோரவில்லை. மக்களுடன் தானும் ஒரு சாதாரண குடிமகனாகி பருத்தித்துறையிலுள்ள தனது இல்லத்திலிருந்து யாழ் பல்கலைக் கழகத்திற்கு 32 மைல்கள் நாள் தோறும் துவிச்சக்கர வண்டியில் பயணம் மேற்கொண்டார்.

சேவையில் ஈடுபடுபவர்கள் மூன்று வகைப்படுவர்.

அ. கூலியாட்கள் சம்பளத்திற்காக மட்டுமே வேலை செய்பவர்கள்.

ஆ. வேலையாட்கள் சம்பளத்திற்காகவும், செய்யப்படும் சேவையின் பலனில் ஆர்வமுடையவராயும் இருப்பவர்கள்.

இ. சாதனையாளர் சம்பளத்திற்காகவோ, அல்லது முயற்சியின் வெற்றிக்காகவோ வேலை செய்பவர்கள் அல்லர். உள் உணர்வினால் உந்தப்பட்டு, வேலை செய்வதில் ஆத்ம திருப்தியடைபவர்கள்.

அரும்பெரும் பணிகளுக்கு ஓர்மமும், திறமையும், விடாமுயற்சியும், பொறுமையும் உடையவர்களின் அர்ப்பணம் அத்தியாவசியமாகும். ஏனெனில் சாதனை புரிய முற்படுபவர்களுக்கு பலசோதனைகள் வரும். சாதனைகளை உலகில் நிலை நாட்டுவதற்காகவே சோதனைகள் வருகின்றன என புராணங்கள் விளக்கமளிக்கின்றன.

மக்களுடன் தானும் ஒருவனாக கடமையின் காரணமாக ஒரு நாள் கிளாலி படகு சேவை மூலம் பிரயாணம் மேற்கொண்ட பொழுது, நல்லூர்க்கரையில் ஹெலி சுடத் தொடங்கியது. அவருடன் சென்ற

முக்கியஸ்தர் ஒருவரை அவரது மெய்க்காப்பாளர் காப்பாற்றினார். அவ்வேளையில் துரை புன்சிரிப்புடன் பிரச்சனையை எதிர்நோக்கி நின்றார். சாதாரண மக்கள் அவ்வேளையில் பய உணர்வினாலும் பதற்ற உணர் வினாலும் பாதுகாப்புத் தேடி அங்கு மிங்கும் அலறியடித்துக் கொண்டு ஓடித்திரிந்தனர்.

அவரின் வேலை நேரம் காலை 7ல் இருந்து பி.ப. 7 வரையாகும். பி.ப. நேரம் தேவையின் காரணமாக அவ்வப்பொழுது அதிகரிக்கும்.

அவரின் ஆத்ம உணர்வின் ஆவேசமும், பாதுகாப்பு வழங்கும் கரிசனையும் மற்றும் ஊக்குவிப்பும் இந்நாட்டில் சவால்கள் நிறைந்த தொழில் துறையான பொறியியல் துறையில் பலரின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஒளியாக அமைந்தது.

''இவர் மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண் துஞ்சா''...... கீதையில் ''கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'' எனக் கண்ணன் செய்த உபதேசம் ''துரை''யின் செயற்றிறனுக்கு இலக்கணமாகியது. அவரைத் தேடி வந்த புகழனைத்தும் அவருடைய தன்னலமற்ற சேவையின் விளைவு என்பது யதார்த்தம்.



யாழ் பல்கலைக்கழகத்தால்
வழங்கப்பட்ட பிரியாவிடையில்
துணைவேந்தரும் துணைவியாரும்.

## எல்லோர்க்கும் கல்வி

''எல்லோர்க்கும் கல்வி'' எனும் அவரின் சித்தாந்தத்திற்கமைய சமூகத்தின் சகல தரப்பினரும் பயன்பெறு வண்ணம், குறிப்பாக தொழிலாளர் கல்வி, புறநிலைப் படிப்பு அலகுகள் என்பன பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டன.

## இயற்கை வள, பொருளாதார அபிவிருத்தியில்.......

இயற்கை வளங்களாகிய கடல், வனம், நீர் மற்றும் தாவர வளங்களையும் தாவர உற்பத்திப் பொருட்களையும் பொருளாதார அபிவிருத்தியை கருத்தில் கொண்டு விருத்தி செய்ய வேண்டுமென்பதில் அவர் அதீத தீவிரத்துடன் செயற் பட்டார். அத்துடன் விவசாயத் துறையும், சிறுகைத்தொழில் துறையும், விருத்தி செய்யப்பட வேண்டுமென்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டார். 1990ல் கிளிநொச்சியில் யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை ஆரம்பித்து, தமது வழிகாட் டலில் அத்துறையை மிகவும் வளர்ச்சி காண வைத்தார். முல்லைத்தீவில்

கடல் வளபீடம் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஒப்பந்தத்தை நோர்வேயின் றொஸ்சே பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்டார்.



யாழ் பல்கலைக்கழகத்தில் கடல் வள பீடம் அமைப்பதற்கான ஒப்பந்தம் நோர்வேயில் கைச்சாத்திடப்படுகின்றது.

முறிகண்டியில் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் பெற்றபோதும் நிதிப்பற்றாக்குறையினால் அத்திட்டம் நிறைவு பெறவில்லை.

### அபிவிருத்தி திட்டமிடல் குழுக்கள்:

விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி, கைத்தொழில், சக்தி, போக்குவரத்து, நீர்வளம், காடுவளர்ப்பு முதலியவற்றிற்கென அபிவிருத்திக் குழுக்கள் நியமிக்கப்பட்டு அவற்றிற்கு தலைமைதாங்கி வழிகாட்டினார். இதன் பயனாக பல திட்டங்கள் உருவாகின. பொருளாதாரத் தடையின் தாக்கத்தைத் தணித்து சுயசார்பு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளிலும் அயராது உழைத்தார். (இக்குழுக்களில் நானும் ஒருவனாக இணைந்து இரண்டு ஆண்டுகள் தேசியத் தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்ததை எண்ணி மகிழ்வடைகின்றேன்.)

### ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் வெளியீடுகள்.

தனித்தும், மற்றும் மேலைத்தேய நாட்டறிஞர்களுடனும், உள்நாட்டு தமிழ், சிங்கள அறிஞர்களுடனும் இணைந்து பேராசிரியர் அ. துரைராசா 44 ஆராய்ச்சிக் கட்டுரைகளை புத்தக வடிவில் வெளியிட்டு விஞ்ஞான பொறியியல் துறைக்கு பெரும் பணி ஆற்றியுள்ளார்.

### மாமனிதராக.....

தமிழினத்தின் மைந்தனாக அவதரித்து கல்வியில் மேதையாகி ''துரை கோட்பாட்டை" உருவாக்கிய விஞ்ஞானியாகி, கல்வித்துறைக்கு ஒளியேற்றி வைத்து, சர்வதேச நாடுகளில் தனது வித்தாக பலநூற்றுக்கணக்கான கல்விமான்களை விதைத்து, உருவாக்கி தேசிய, சமூகத் தொண்டிலே சாதனைகள் படைத்து, மானிட சமூகத்திற்கு பல நன்நெறி முறைகளை தனது சாதனைகள் மூலமாக விட்டுச் சென்றவருமாகிய 'துரை' தமிழினத்தின் மாமனிதராக தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் உலகறியப் பிரகடனப்படுத்தப்பட்டார். பௌதீக உலகைவிட்டுப் பிரிந்தாலும், அவரை அறிந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் நெஞ்சங்களின் மத்தியிலும்,மற்றும் பல இனமக்களின் மத்தியிலும் அழியாப் புகழுடன் வாழ்ந்து வருபவருமாகிய சாதனையாளர் திரு. அ. துரைராசாவைப்பற்றி பலகோணங்களில் தகவல் திரட்டொன்றை முடிந்தவரை சுருக்கமாக வாசக நெஞ்சங்களுக்கு தந்துள்ளோம்.

இறுதியாக போற்றுதற்குரிய இந்த மேதையைப்பற்றி பின்வரும் கூற்றை குறிப்பிட்டுவது சாலப்பொருத்தமாகும்.

''இவருடைய சொந்தத் தத்துவம் மிகவும் விரிவான அடித்தளத்தைக் கொண்டது. அவர் எந்தவொரு இனத்தைப் பற்றியோ, சமயத்தைப் பற்றியோ வெறுப்போ, தவறான எண்ணத்தையோ கொண்டிருக்கவில்லை. ஆனால் தனது இனத்திலும், மொழியிலும் மிகவும் ஆழமான-உறுதியான காதல் கொண்டிருந்தார். தனது இனத்தினதும், மொழியினதும் வெற்றிக்காக அச்சமின்றியும் தங்கு தடையின்றியும் கருமமாற்றினார்.''

நிறைவாக, **சுவாமி விவேகானந்தரின்** வீர முழக்கத்தை ஞாபக மூட்ட விரும்புகின்றோம்.

- ♦ எழுமின், விளிமின், குறிசாரும் வரை நில்லாது செல்மின்!
- ♦ ஒருவர் அடைய வேண்டியதை உலகின் எந்த ஒரு சக்தியாலும் நிறுத்த முடியாது!
- ♦ அரும்பெரும் சாதனைகள் பெரிய தியாகத்தால் மட்டுமே சாதிக்க முடியும்!

**இவ்வழி நின்று நாமும் 'துரை' போல் சாதனை படைப்போம்!**

மொழிபெயர்ப்பு, நேர்காணல்,
கருத்துத் தொகுப்பு

-காங்கேயதிருமலைவன்னியான்.-

# குடும்பச் சண்டை சத்த அசுத்தமா ?

ஒரு வீட்டிலிருந்து ஒரு வேளை மிகவும் சத்தத்துடன் வானொலிச்சத்தம் கேட்கும், வேறு சந்தர்ப்பத்தில் மிகவும் குறைந்த ஒலியுடன் அதுகேட்கும்.


இதற்கு என்ன காரணம் என்று கேட்ட பொழுது வீட்டுக்காரர் ''எனக்கும் மனைவிக்கும் இடையில் சண்டை நடக்கும் பொழுது நான் அயல் வீட்டுக்காரர்களுக்கு அது கேட்காது இருப்பதற்காக வானொலியின் சத்தத்தைக் கூட்டிவைத்து விடுவேன்.'' என்றார்.

அது சரி, ஏன் வேறு சந்தர்ப்பத்தில் வானொலியின் சத்தம் குறைவாகக் கேட்கின்றது? என்று வினவிய பொழுது அவர் கூறினார். ''அயல் வீட்டுக்காரர்களின் சண்டையை கேட்பதற்காக எமது வானொலி சத்தத்தை குறைத்து விடுவோம்''

அயலவர் சண்டையைக் கேட்டு நாம் மகிழத்தான் வேண்டுமா? அளவுக்கு அதிகமான சத்தம் (NOISE POLLUTION) மனிதர்களுக்கு பலவிதமான கோளாறுகளை ஏற்படுத்துகின்றது என்பதை வாசக நெஞ்சங்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறோம்.

**Don't say I have no time;**
**Say I don't have mentality**

# பிரபஞ்சத்தில் நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோமா?



எவையெல்லாம் இருக்கின்றனவோ அவையெல்லாம் பிரபஞ்சமே [Universe] நாம், நாம் வாழும் புவி, [Earth] தூமகேதுக்கள் [Comets] நட்சத்திரங்கள், ஆகாய கங்கைகள், [Galaxies] என எல்லாமே பிரபஞ்சத்தின் கூறுகளே. பிரபஞ்சம் நூறு பில்லியன் பில்லியன்கட்கு மேற்பட்ட நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது. பிரபஞ்சம் வெற்றிடமாகக் கருதக்கூடியது. 100m நீளம், 100m அகலம், 100m உயரம் அதாவது ஒரு உதைபந்தாட்டத் திடலின் மேல் 100m உயரமான பிரதேசத்தில் 0.01மி.மீற்றர் விட்டம் கொண்ட ஒரு துணிக்கை இருப்பது போலவே பிரபஞ்சத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் உள்ளது.

பெரு வெடிப்புக் கொள்கையே [Big bang theory ] இன்று வரை உள்ள கொள்கைகளுள் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பல நிகழ்வுடன் பொருந்தும் கொள்கையாகவும் உள்ளது. 15000 மில்லியன் வருடங்கட்கு முன் மிகவும் சிறிய வெப்பமான பதார்த்தமாக பிரபஞ்சம் இருந்தது. அணுத்துணிக்கைகள் இணைந்து ஐதரசன் [Hydrogen] கீலியமாக[Helium] உருவாகி-பெருத்து - வெடித்துக் குளிர்ந்ததே பெருவெடிப்பு. பெரு வெடிப்பு நிகழ்ந்து 3000 வருடங்களின் பின் ஆகாய கங்கைகள் உருப்பெற்றன இன்று 100 000 மில்லியனிற்கும் அதிகமான ஆகாய கங்கைகள் உள்ளன. ஒவ்வொரு ஆகாய கங்கையிலும் 1000 மில்லியனிற்கு மேல் நட்சத்திரங்கள் உள்ளன. எமது சூரியக்குடும்பம் [Solar System] பால்வீதி [Milky way] எனப்படும் ஆகாயகங்கையில் உள்ளது.

பெருவெடிப்பின் போது உருவாகிய நட்சத்திரங்களில் ஒன்றே சூரியன். நட்சத்திரங்கள் எல்லாவற்றிற்கும் ஆரம்பம் ஒன்றே. உருவாக்கமும் ஒரே மாதிரியானவை. எனவே சூரிய நட்சத்திரத்திற்குப் பல கோள்கள் உள்ளது போல இன்னும் பல மில்லியன் மில்லியன் நட்சத்திரத்திற்குக் கோள்கள் இருக்க வேண்டும். இவற்றுள் பல மில்லியன் நட்சத்திரங்களின் கோள்களில் மனிதன் இருக்க வேண்டும். ஒரு மில்லியன் நட்சத்திரங்களில் 1 நட்சத்திரத்திற்கே கோள்கள் இருக்க வேண்டும். எனக் கணிக்கின்றோம். அவ்வாறே கோள்களுள்ள நட்சத்திரங்களுள் ஒரு மில்லியனில் ஒரு கோளிற்கே உயிரினம் உள்ளதாகக் கணிப்போம். ஆகவே எங்கோ ஒரு இடத்தில் நிச்சயமாக மனிதன் வாழ வேண்டும்.

இன்று வரை உள்ள அதிநவீன கருவிகளினால் உணரக் கூடிய தூரம் 87 000 மில்லியன் கிலோ மீற்றர்கள். இக்குறிப்பிட்ட தூரத்திற்குள் பல பில்லியன் பில்லியன் நட்சத்திரங்கள் உள்ளன. ஆனால் இன்று வரை புவி தவிர்ந்த வேறு எந்தக் கோள்களிலும் உயிரினமோ மனித இனமோ இருப்பதாக உணரப்படவில்லை.

அமெரிக்கா, ரஸ்யா போன்ற நாடுகள் பல பில்லியன் அமெரிக்க டொலர்களை, வேற்று மனிதனைக் கண்டு பிடிப்பதற்காக வருடாந்தம் செலவு செய்கின்றனர். அந்நாடுகள் வருடாந்தம் விண்வெளி ஊடுருவிகள் (Space Probes) அனுப்பிய வண்ணம் உள்ளன. அவற்றில் உலகின் முக்கிய மொழிகளிலும், ஓவிய வடிவிலும் எமது பூமி பற்றிய தகவல்களை வைத்துள்ளனர். இவற்றை வேற்று மனித இனம் காணும் பட்சத்தில் அவர்கள் எம்மோடு தொடர்பு கொள்வார்கள் என்ற அவாவே.

அதேபோல் வேற்றுமனிதர்கள் அனுப்பும் சமிக்ஞைகள், அல்லது அங்கிருந்து வெளியேறும் கதிர்களைக் கண்டறிவதற்காக பூமியின் பல பாகங்களிலும் வானொலி உணர்கருவிகள் [Radio telescope) நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இன்று வரை எந்த தகவலுமே வந்தடையவில்லை. வேற்று மனிதர்கள் வாழ்கின்றார்கள் என எவ்வகையிலுமே எம்மால் உணரப்படவில்லை. உண்மையில் நாங்கள்தான் இப்பிரமாண்டமான பிரபஞ்சத்தில் தனித்து விடப்பட்டுள்ளோமா?

எம்மை தனித்து நடுக் காட்டில் விட்டால் எவ்வாறு பயத்தை உணர்வோமோ, அவ்வாறான உணர்வு உங்களுக்கு ஏற்படவில்லையா?

இக்கட்டுரை பிரபஞ்சத்தின் ஓர் அறிமுகமே.

பெ.க. சிவலிங்கம்
10ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

---

## ஆக்ஸ்போர்டு பேரகராதி

உலகத்திலேயே மிகப் பெரிய அகராதி ஆக்ஸ்போர்ட் பேரகராதி தான் இந்த அகராதியின் தயாரிப்பு முயற்சி 1838 ஆம் ஆண்டு துவங்கியது. 1884 ஆம் ஆண்டு அந்த அகராதியை அச்சிடத் தொடங்கினார்கள். தொடர்ந்து 46 ஆண்டுகாலம் பெரும் உழைப்பினை மேற்கொண்டு அந்த அகராதியை அச்சிட்டு முடித்தார்கள்.

(SET OUT) 'செட் அவுட்' என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் அந்த அகராதியில் 18 பக்கங்களுக்கு மேலாக பொருள் விளக்கம் தரப்பட்டிருக்கின்றது. 'S' எஸ் என்ற எழுத்துப் பகுதியே இந்த அகராதியில் மிகவும் பெரியதாகும். இதில் மட்டும் 57,428 சொற்கள் உள்ளன.

(பிறமொழி அறிவு, அறிவு வளர்ச்சியை பன் மடங்காக்கும். அறிவு வளர்ச்சிக்கு ஆங்கில மொழி ஒரு உந்து சக்தியாகும். எனவே அனைத்து பெற்றோரும் தத்தமது பிள்ளைகளின் ஆங்கில அறிவை வளர்க்க துணையாக இருங்கள். அறிவுக்கதிரும் அப்பணியில் ஈடுப்பட்டுள்ளது.)

# தேனீக்கள் கூட்டுறவுக்கான சின்னம்

சி. பவானி. 3101

எளிதில் சமிபாடு அடையக் கூடிய அதிக சத்து நிறைந்த உணவு வகைகளில் குறிப்பிடத்தக்க தேன் இன்று வைத்தியர்களினால் நோய் தீர்க்கும் மருந்தாகவும் சிபார்சு செய்யப்படுகிறது. பல்துறை பயன் மிக்க இந்தத் தேனை உருவாக்கித் தரும் தேனீக்களின் வாழ்க்கை முறை சுவாரசியமானது.



ஒவ்வொரு தேனீக் குடும்பத்திலும் ஆண்தேனீ, இராணித்தேனீ, வேலை செய்யும் தேனீ என்று மூன்று வகையான தேனீக்கள் உள்ளன.

ஆண் தேனீக்கள் நடுத்தர உருவமுடையன. இவற்றின் கண்கள் பெரியவை ஒரே வேலை இராணித் தேனீயோடு கலவி புரிவதுதான். அது முடிந்ததும் இறந்து விடும்.

பெரும்பாலும் ஒரேயொரு இராணித் தேனீதான் ஒவ்வொரு கூட்டிலும் காணப்படும். கூட்டின் தெய்வமாகக் கருதப்படுவதும் ராணித் தேனீதான். இது மற்றைய தேனீக்களைக் காட்டிலும் உருவத்தில் பெரியது. இது வாழும் காலம் ஏழு ஆண்டுகள்.

இளம் பணியாள் தேனீக்கள் முதிர்வடையும் வரை தேன் கூட்டை விட்டு வெளியேறுவதில்லை. முட்டைகளிலிருந்து விருத்தியடையும் குடம்பி. கூட்டுப்புழுக்களைப் பராமரிக்கும் ''செவிலித்தாய்''களாக தொழிற்படுகின்றன. முதிர்ந்த பணியாட்கள் கொண்டு வந்து தரும் மகரந்தங்களிலிருந்து இவை ''றோயல் ஜெலி'' என அழைக்கப் படும் அரச கூழை தயார் செய்து இளம் புழுக்களுக்கு வழங்குகின்றன.

தேன் கூட்டை கட்டுவது, அதனைப் பழுது பார்ப்பது கூட்டைச் சுத்தமாகவும், கதகதப்பாகவும் வைத்திருப்பது எதிரிகளிடமிருந்து பாதுகாப்பது, அறைகள் தேனால் நிரப்பப்பெற்றதும் மெழுகு பூசி அடைப்பது எனப் பல்வேறு வேலைச் சுமைகளுக் கிடையில் இவை இராணித் தேனீயைச் சுற்றியிருந்து அதற்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்து கொடுக்கின்றன.

இளம் பணியாட் தேனீக்கள் முதிர்வடைந்ததும் வெளியில் சென்று மகரந்தம், அமுது போன்றவற்றைச் சேகரிக்கத் தொடங்கிவிடும். பூக்களில் மகரந்தங்களை சேகரித்து உருண்டையாக்கி தமது பின்னங்கால்களில் உள்ள மகரந்தக் கூடையினுள் நிரப்பிக் கொள்ளும் பூக்களின் அமுதச் சுரப்பிகளில் இருந்து அமுதத்தை உறிஞ்சி விழுங்கிக் கொண்டு கூட்டுக்கு திரும்பி விடுகின்றன. இவை கொண்டு வந்து கக்கும், அமுதமே இறுகி நாளடைவில் தேன் ஆகிறது.

## தேனின் மகிமை

மலர்களிலிருந்து தேனீ பெறும் பொருளுக்கு பூந்தேன் என்று பெயர். அவ்வேளையில் அப்பொருளில் 80% நீரும், 20% தேனும் காணப்படும்.

இதை தேனீ தனது வயிற்றில் சேகரித்துக் கொண்டு கூட்டை அடையும் பொழுது அதன் வயிற்றில் ஏற்படும் செயற்பாடுகளின் காரணமாக தேன் 80% ஆகவும் நீர் 20% ஆகவும் மாற்றமடைகின்றது.

இந்நிலையில் தேன் கூட்டை அடையும் தேனீ தலைகீழாக தொங்குவதன் மூலம் கூட்டிலும் சூழலிலும் காணப்படும் வெப்பத்தினால் 20% ஆக இருந்த நீர் முற்று முழுதாக வெளியேற்றப்பட்டு 100% சுத்தமான தேனாக மாறுகின்றது.

தேனை சேகரிப்பதற்கென வேலையாள தேனிகளால் தயாரிக்கப்படும் தேன் அறையில் தேன் சேமிக்கப்பட்டு மெழுகினால் அறை அடைக்கப்படுகின்றது.

சுத்தமான தேனில் பதப் படுத்தப்படும் பொருள் என்றும் பழுதடையாது.

இத்தேன் பலநோய்களைக் குணப்படுத்தவல்ல மருத்துவ முடையது.

ஆயிரம் வருடங்களுக்கும் பழுதடையாது இருக்கும் சிறப்பியல் புடையது தேன்!

பணியாட் தேனீக்கள், இனக்கலப்பில் ஈடுபட முடியாதவை. இவை மலடான பெண் தேனீக்களாகும்.

கூட்டின் பழைய ராணி பலவீன முற்றதும் பணியாட் தேனீக்கள் புதுராணியை உருவாக்குகின்றன. புதுராணி உருவான சில நாட்கள் கழித்து, தனது அறையிலிருந்து வெளியே சென்று ஆண் தேனீக்களுடன் கலவியில் ஈடுபடும்.

முட்டைகளைத் தேவைகளுக்கேற்ப அடையில் உள்ள வெற்று அறைகளில் இராணித்தேனீ இடுகின்றது. தேன் அடையில் இராணி, ஆண்தேனீ, பணியாட்தேனீ வளர்வதற்கென தனித்தனியான அறைகள் உள்ளன. முட்டைகளிலிருந்து வளரும் குடம்பிப் புழுக்கள் சிறிது நாட்களுக்கு அரச கூழ் உண்டு வளரும். இந்த உணவு இராணியாக உருவாகும் புழுக்களுக்கு மட்டும் தொடர்ந்து வழங்கப்படும். மற்றயவற்றுக்கு தேன் ரொட்டி வழங்கப் படும். உண்ணும் உணவே தேனிக்களில் வகைகள் உருவாகக் காரணமாகின்றன.

இராணிச் சிற்றறையிலிருந்து வெளிவரும முன்பு இளம் இராணி ரீங்கார ஒலி செய்கின்றது. முதிய இராணி அதற்குப்பதில் ஒலி புரிகின்றது. சில சமயங்களில் புதிய இராணியைக் கொல்வதற்கு முயற்சிப்பதும் உண்டு. அப்போதெல்லாம் பணியாட்கள் ரீங்காரமிட்டு, அமைதியின்மையை வெளிக்காட்டி, அதனைத் தடுப்பதில் ஈடுபடுகின்றன.


புதிய இராணியின் வருகையால் மனமுடைந்த முதிய இராணி கூட்டிலிருந்து தேனீக்கள் ஒரு பகுதியோடு பெயர்ந்து தனிக்குடித்தனம் அமைத்துக் கொள்கின்றது. இதனைத் தான் நாம் திரள்பிரிதல் என்கிறோம்.

~ நன்றி ~

பசுந்தோகை 2002

**இரத்த உறவை விட இலட்சிய உறவே மேன்மையானது**

# சாதனையாளர் வரிசையில்



யார் இவர்?
அடுத்த இதழுக்காக
காத்திருங்கள்.

"அறிவுக்கதிர்" ஆய்வுக்கட்டுரைப் போட்டி நுழைவுச் சிட்டை

படைப்பாளியின் பெயர்:- ..............................

முகவரி:- ..............................

..............................

..............................

தே.அ.அ.இல.:- ..............................

தொ.பே.இல.:- ..............................

..............................

அலுவலகப் பாவனைக்கு

விண்ணப்ப இல.:- ..............................

பெற்ற திகதி :- ..............................

எமது அன்பு நெஞ்சம் ஒருவரின் எண்ணங்கள் வாசகர்களின் தகவலுக்காக பிரசுரிக்கப்படுகின்றது

புலியம் பொக்கணை,
பரந்தன்.
23.10.2003

ஆசிரியர்,
அறிவுக் கதிர்.

அன்பும் அறிவும் வீரமும் தாங்கி,

இன்ப ஊற்றாக வெளிவரும் அறிவுக் கதிரை ஆவலுடன் வரவேற்கின்றேன். ஆடி-புரட்டாதி 2003 இதழ் 20.10.2003 அன்று என் அறிவுக்கு விருந்தானது. இவ்வாறான ஓர் அரிய நூல் வெளியிடப்படும் செய்தியை அன்றுதான் அறிந்து கொண்டேன். புற இருள் நீக்கும் கதிரவன் ஒளிபோன்று, அக இருள் நீக்கும் அறிவுக் கதிராக அகிலத்தை உயரவைக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்க, வளர்க என வாழ்த்துகின்றேன்.

அறிவுக் கதிரின் ஆக்கங்கள் செறிவுள்ளன. காலாண்டு சஞ்சிகை மாத இதழாக மலர்ந்து வர வேண்டுகின்றேன். இச்சஞ்சிகையின் அடுத்த இதழ் எங்கே. எப்போது பெற்றுக் கொள்ள முடியும் என்பதனைத் தயவு செய்து அறியத் தரவும். அத்துடன் கரைச்சிக் கோட்டம், கண்டாவளை, தருமபுரம் என்ற கோட்டங்களுக்கு அனுப்பி வைக்க முடியுமாயின் அதற்கான பணத்தினை ஒப்படைக்க நான் தயாராயுள்ளேன் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

நன்றி.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
வாசகி
S. Ratnavathy.
[சி. இரத்தினவதி].

எமது சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து விடயங்கள் பற்றியும், அல்லது ஒன்றோ, அல்லது பல விடயங்கள் பற்றியும் உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனம் வரவேற்கப்படுகின்றது.



குரு

ஓம்

# யோக சாத்திரம்

காங்கேயதிருமலைவன்னியான்

## அறிமுகம்

## பகுதி - II

உடலுறுப்புக்களுக்கான பல்வேறு யோகாசனப் பயிற்சிகள்.
இக்கலைக்கு உடலுறுப்புக்களை கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கால், கைகள்
2. இடுப்பு
3. வயிற்றுப் பகுதி,
4. மார்புப்பகுதி
5. முள்ளம் தண்டுப்பகுதி
6. கழுத்துப் பகுதி
7. தலை
8. உள்ளுறுப்புக்கள்.

உடலுறுப்புக்களுக்கான பயிற்சிக்கு ஆசனப் பயிற்சிகள், பிராணாயாமம் அல்லது மூச்சுப் பயிற்சி, தியானம் போன்ற அனைத்துப் பயிற்சிகளின் மூலம் மேற்கூறப்பட்ட உடலுறுப்புக்கள் உட்பட, பிராணன் அல்லது ஆன்மாவிற்கும், உள்ளத்திற்கும் பயிற்சியளிக்கப்படுகின்றது.


உடல், உள்ள, ஆன்ம ஆரோக்கியமென்னும் பொழுது உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தத்தமது பணிகளை சிறந்த முறையில் செய்வதன் மூலம் உடலின் ஒட்டு மொத்தமான ஆரோக்கியத்தை அதி உச்ச சமநிலையில் வைத்திருப்பதையே குறிக்கும். உறுப்புக்களின் சமச்சீர் செயற்பாடு மாறுபடும் பொழுது அது ஏதோ ஒரு நோய்க்கு காரணமாக அமைகின்றது. உதாரணத்திற்கு ஆரோக்கியமான ஒரு மனிதன் ஒரு நிமிடத்திற்கு சராசரி 15 தடவைகள் சுவாசத்தை உள் வாங்கி வெளிவிட வேண்டும். ஒரு நிமிடத்திற்கு நாடித் துடிப்பு 72 முறைகள் துடிக்க வேண்டும்...... இவ்வாறு பல நுட்ப மான விடயங்கள் உண்டு. இந்த இயற்கை விதியில் ஏற்படும் மாற்றம் ஏதோ ஒரு நோய்க்கு அடிப்படையாக அமைகின்றது. யோகாசனக் கலையின் ஓர் அடிப்படை விதி உடலின் ஆரோக்கிய சமநிலையை பேணுவ தாகும் அல்லது சமநிலை அற்றுள்ள சாதகனின் செயற்பாட்டை சமநிலைப் படுத்துவதாகும். இக் காரணத்தினாலேயே மாற்று ஆசனம் (COUNTER POSTURE) என்ற கோட்பாடு பயிற்சியில் கடைப்பிடிக்கப்படுகின்றது. உதாரணத்திற்கு சிரசாசனம் செய்த பின் ஏகபாத ஆசனம் அல்லது நின்ற பாத ஆசனம் செய்ய வேண்டும் என்று பயிற்று விக்கப்படுகின்றது. இவ்வாறு அனைத்து ஆசனங்களுக்கும் மாற்று ஆசன பயிற்சி உண்டு. அண்மைக் காலங்களில் இக்கோட்பாடு வலியுறுத்தப்படுகின்றது. இதனை இலகுவாக விளக்குவாதானால், உடலை முன்பக்கம் வளைத்து வயிற்று உறுப்புக்களையும், நெஞ்சு உறுப்புக்களையும் நசித்து சுருங்கச் செய்தால், அவ்வாறான பயிற்சியைத் தொடர்ந்து பின்புறம் உடலை வளைப்பதன் மூலம் அதே உறுப்புக்களை விரிவுபடுத்துதல் அவசியமாகின்றது. இவ்வாறே சிரசிற்கு அதிகமாக இரத்தத்தைப் பாயச் செய்தால், எதிர்த்திசையில் கால்களுக்கும் அதிக குருதி பாயச் செய்ய வேண்டும். மாற்று ஆசனம் இந் நிலையை அடைய உதவுகின்றது.

## ஒரு சில ஆசனங்களைப்பற்றி மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்

**சூரிய (நமஸ்காரம்) வணக்கம்.**


இப்பயிற்சி 12 நிலைகளைக் கொண்டது. இதில் செய்யப்படும் ஒவ்வொரு நிலைகளும் எமது உடலை பின் பக்கமும், முன் பக்கமும் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு அளவு வளைக்கவும் உதவுவதுடன், இடுப்பிற்கு மேலுள்ள உடல் பகுதியை கால்களுடன் இணையும்படி வளைத்து உறுப்புக்களை நசிப்பதற்கும், கை, கால்கள், கழுத்துப்பகுதிக்கும் பயிற்சி கிடைக்கக் கூடியவாறு அமைந்துள் ளது. இப்பயிற்சி அதிகாலை வேளை சூரிய உதய நேரத்தில் சூரியனை நோக்கியவாறு செய்வதனால் சூரிய ஒளிக் கதிர்கள் மூலம் உடல் உறுப்புக்கள் சக்தி பெறுகின்றன. இந்த ஆசனத்தில் ஒரு சுற்றிலுள்ள 12 நிலைகளையும் பல தடவைகள் மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் தொடர்ந்து ஏனைய யோகாசனப் பயிற்சிகளை இலகுவாகச் செய்வதற்கு சூரிய வணக்கப்பயிற்சி முன்னோடியாக துணைசெய்யும்.

**பஸ்சிமோத்தாசனம்**



இவ் ஆசனம் வானத்தைப் பார்த்தவாறு விரிப்பில் மல்லாந்து படுத்திருந்து பின் உடலையும் மேலேயுயர்த்திய கைகளையும் உடலை இடுப்புடன் மடித்து நிமிர்ந்து பின் முன் வளைந்து கைகளால் பெருவிரலைப் பற்றியவாறு முழங்கால்கள் மடியாது முகத்தால் முழங்காலை தொடுதல். பின் பழைய நிலைக்கு செல்லுதல்.

**ஹலாசனம்:**




மல்லாக்காகப்படுத்துக் கொண்டு இரு கைகளும் உடலுடன் அணைத்த நிலையில் உள்ளங்கைகள் நிலத்தைப்பார்த்தவாறு வைத்த நிலையில் கால்கள் இரண்டையும் உயர்த்தும் பொழுது உடலையும் தலைக்கு மேலால் உயர்த்தி கால்களின் விரல்கள் தலைக்கு அப்பால் நிலத்தைத் தொடுதல். உடலை வளைப்பதைப் பொறுத்து இதில் வெவ்வேறு நிலை களுண்டு. இதை கலப்பை ஆசனம் என்றும் கூறுவதுண்டு.

**புஜங்காசனம்**




விரிப்பின் மேல் குப்புறப்படுத்து இருகைகளையும் நெஞ்சிற்கு இரு பக்கங்களிலும் ஊன்றியவாறு இடுப்பிற்கு மேலுள்ள உடலின் பகுதியை பின்புறமாக வளைத்து நிமிர்த்துதல் மீண்டும் ஆரம்ப நிலைக்கு திரும்புதல்.

**சர்வாங்காசனம்:**




நிலத்தில் விரிப்பின் மேல் மல்லாந்து படுத்து கழுத்திற்குக் கீழ் உடல் முழுவதையும் தலைப் பக்கமாக வளைத்து தூக்கும்பொழுது இரு கைகளையும் மடித்து முதுகின் பின்புறத்தை கைகளால் பற்றியவாறு கால்களையும் உடலையும் கழுத்திற்கும் தலைக்கும் $90^0$ யில் இருக்கக் கூடியவாறு வைத்திருத்தல். சில வினாடிகள்/நிமிடங்களின் பின் பழைய நிலைக்கு செல்லல்.

**சிரசாசனம்:**



முழங்கால்களை மடித்து குந்தி இருந்து தலையின் உச்சியை முன் வளைத்து நிலத்தில் வைத்து, தலையின் பின்புறத்தில் இரு கைகளாலும் விரல்களை இணைத்தப்படி வைத்து ஆதரவு கொடுத்த நிலையில் கால் விரல்கள் நிலத்தை தொட்டவாறு, கால்களை நீட்டுவதன் மூலம் உடலின் பிறபகுதியை வானத்தை நோக்கி உயர்த்திய நிலையில் சில வினாடிகள் நின்று பின் தொடைகளை உடலுடன் மடித்து அணைக்கும் பொழுது கீழ் கால்களை வானத்தை நோக்கி உயர்த்தும் பொழுது முழங்கால்களும் உடலும் பூமிக்கு மேல் $90^0$ யில் நிறுத்துதல், ஒவ்வொருவர் தகுதிக்கு ஏற்ப செய்யும் நேரத்தை கூட்டலாம். இவ் ஆசனத்தை குருவின் துணையுடன் செய்ய வேண்டும்.


**பத்மாசனம்:**



விரிப்பின் மேல் குந்தி இருந்து வலது காலை மடித்து பாதத்தின் மேற்பகுதியை இடது தொடைக்கும் இடுப்பிற்கும் மேல் வைத்து பின் இடது கால்களையும் மடித்து வலது தொடைக்கும் இடுப்பிற்கும் மேல் வைத்து இரு கைகயையும் சின் முத்திரை நிலையில் இரு முளங்கால்களின் மேல் வைத்தல். உடல் நிமிர்ந்து

இருக்க முகம் நேரே பார்த்திருக்க சாதாரண சுவாச நிலையில் அமர்ந்திருத்தல். சாதகனின் வசதிக்கேற்ப நேரத்தை அதிகரிக் கலாம். பிராணாயாமமும், தியான மும் இந்நிலையில் இருந்தே மேற் கொள்ளப்படுகின்றது.

**உட்டியானா:**



வயிற்றுப்பகுதியை முள்ளந் தண்டுடனும் பின் விலா எலும்புப் பகுதியுடனும் ஒட்டக்கூடியவாறு நசித்தல். இதில் முக்கியமாக நாலு நிலைகளுண்டு, அவையாவன மத்திம நௌலி, வாம நௌலி, தட்சினி நௌலி, உட்டியானா உட்பட.

**சாந்தியாசனம் / சவாசனம்:**

மல்லாந்து படுத்து கால்களை சிறிது அகட்டிய நிலையில் கைகள் இரண்டையும் சிறிது அகட்டிய நிலையில் உடலுக்கு பக்கத்தே வைத்து உள்ளம் கைகள் வானத் தைப் பார்த்த நிலையில் வைத்தல். சுவாசம் சாதாரணம், கண்கள் மூடி இருத்தல், உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் எண்ணி அவை சிறந்த முறையில் செயற்பட்டு உடலை ஆரோக்கிய நிலையில் வைத்திருக்க வேண்டுமென்று வேண்டி ஒவ்வொரு வேண்டுதலின் பின் ஓம் சாந்தி என்று மனதிற்குள் கூறி முடித்தல். இந்த நிலையில் 10 - 15 நிமிடம் வரை இருந்து உடலுக்கு சக்தியும் அமைதியும், சாந்தியும் வேண்டி பிரார்த்தித்தல். நிறைவு செய்யும் பொழுது உடல் உறுப்புக்களை வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அமைதியாகத் திருப்பி பின் எழுந்திருத்தல்.

நோயால் பீடிக்கப்பட்ட சாதகர் கள் அந்தந்த நோய்களை குணப் படுத்துவதற்காகப் பயில வேண்டிய ஆசனத் தொகுதிகளை குருவின் ஆலோசனையுடன் செய்ய வேண்டும்.

மேலே கூறப்பட்டவை சில ஆசனங்கள் மட்டுமே, ஆசனங்கள் பலவகையுண்டு. அவைபற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் அறிந்து கொள்வோம்.

## குறிப்பு

படங்களிலுள்ள மூவர்

1. கட்டுரையாசிரியர்
2. அவரது தந்தை (குரு)
3. சிரேட்ட சகோதரன்

(அடுத்து பிராணாயாமம் பற்றியும் 4ம் பகுதியில் தியானம் பற்றியும் குறிப்பு இடம் பெறும்.)

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**வளரும்**

- பணிந்து வாழ்ந்தால் உயர்ந்து போவாய். நிமிர்ந்து திரிந்தால் இறங்கி வருவாய்.
- முடியுமென்று நினை; முடிவென்று நினைக்காதே!

# எண்ணங்களே வாழ்வின் ஏணிப்படிகள்

- அருணா -

பெரும்பாலானோர் தாழ்வான மனப்பான்மை, கீழான எண்ணங்கள் போன்றவற்றை தமது மனங்களில் நிறைத்து வைத்திருப்பதால் வெளிவாழ்வில் எடுக்கும் காரியங்களில் வெற்றி பெறுவதில்லை. இதற்கு அவர்களை ஆக்கிரமித்துள்ள பயம், பதற்றம், தன்நம்பிக்கையின்மை, மனதில் உறுதியின்மை, சிறந்த திட்டமிடல் இன்மை, மாற்றுத் திட்டத்தை முற்கூட்டி திட்டமிடாதமை ஆகியவை காரணங்களாகும்.

எனவே முதலில் எமது மனதில் நல்ல எண்ணத்தை விதைக்க வேண்டும். ''வித்து ஒன்று போட வேறொன்று தோன்றுமா? எந்தெந்த நல்ல விடயங்கள் எல்லாம் நம் வாழ்வில் நடைபெற வேண்டும் என்று நாம் நினைத்து ஆசைப்படுகிறோமோ, அவ் எண்ணங்களை நம் மனதில் போடுகிறோம் என்பது மிக முக்கியம். ஏனெனில் எம் மனதை ஒரு குறித்த இலக்கை நோக்கி செலுத்தும் போது தான் நம் எண்ணங்கள் வலுப்பெறு கின்றன. அவ்வாறு வலுப்பெற்ற எண்ணங்களே செயலாகப் பரிணமிக்கிறது.

இலக்கு, இலட்சியம் இல்லாத மனிதன் இழப்பு மேல் இழப்பைச் சந்தித்து தனது வாழ்நாளை விரக்தியுடனும் வேதனையுடனும் கழிக்க நேரிடுகிறது. இவற்றைத் தவிர்த்து நாம் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமாயின் ''உணர்ச்சிகள் எம்மை ஆளக்கூடாது, உணர்ச்சிகளை நாம் ஆளவேண்டும்.'' நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களின் மெல்லுணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரிய வேண்டும். இவற்றைக் கைக்கொண்டால் எமது வெற்றிக்கான வழியி லுள்ள பல இடர்கள் இருக்கவே வாய்ப்பில்லை.

அன்றாட வாழ்க்கையில் பலருக்கு பண்பாக உரையாடத் தெரிவ தில்லை, வாதாடத்தான் தெரிகிறது. இதனால் வலிந்து பிரச்சனைகளை வாங்கிக் கொள்கிறோம். வாழ்க்கையை இனிமையாக அமைப்பதற்கு எமது நடவடிக்கைகள் விசாலமானவையாக இருக்க வேண்டும். அதைவிடுத்து விசாலத் தன்மை காணப்படின் அது பல விபரீதங்களையும், வீண் பிரச்சனைகளையும் கொண்டுவந்துவிடும். எனவே தெளிந்த நற்சிந்தை எம்மிடம் தோன்றின் பரந்த மனப்பான்மை தோன்றி எம்மனதில் நிரந்தர அமைதி ஏற்படும்.

ஒருவனின் கடந்த காலத்தை வைத்து நல்லவனா? கெட்டவனா? என்று தீர்மானிப்பது தவறு. அவன் வாழவிருக்கும் பாதையைப் பார்த்தே திர்மானிப்பது சிறந்தது. எதைப் பேசினாலும் தெளிவாகப் பேசுகிறானா? அதில் ஆழமான கருத்துள்ளதா? எடுக்கும் பணிகளை திறம்பட செய்கின்றானா? இலக்கு,

இலட்சியத் துடன் செயற்படுகிறானா? என்பதை அவதானிப்பதன் மூலமே அவன் முழு மையான மனிதன் வாழ்வில் வெற்றியை நோக்கி நடைபோடும் மனிதன், என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

"பருவம் தவறிய மழையும், நிதானம் தவறிய மனிதனும் பயன் அற்றுப் போவது உறுதி" இது பகவத்கீதை கூறும் உண்மை. எனவே வாழ்வில் வெற்றியீட்ட நினைப்பவர்கள் ஒவ்வொருவரும் செய்யப்போகும் காரியத்தை எத்தகைய இடர்வரினும் அயராத உழைப்புடனும், விடா முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் செயலாற்ற வேண்டும். இது இல்லையென்றால் அது என்று மாற்றுத் திட்டம் தயார் செய்து வைத்திருத்தல் வேண்டும்.

இறுதியாக எதிர்பார்த்தது இல்லையென்றால் இடிந்து போகாமல் இருக்க வேண்டும். ஒழுக்கமும், ஊக்கமும், அயராத உழைப்பும் இல்லாத செயல் இலக்குத்தவறிய வேட்டுக்கு ஒப்பானது.

---



## கல்வியில் திருக்கோணமலை மாவட்டம் தேசிய மட்டத்தில் சாதனை!

தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் ரவீந்திரதாஸ் அபிலாஷ் கடந்த வருடம் இடம்பெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளராக கடமைபுரியும் திரு. சாம்பசிவம் ரவீந்திரதாஸ், மற்றும் அதே பிரதேச செயலகத்தில் எழுதுநராக கடமைபுரியும் திருமதி. நாளினி ரவீந்திரதாஸ் என்பவர்களின் சிரேஷ்ட புதல்வருமாவார்.

இவர் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு ஆண்டுதோறும் ஆங்கிலம், சங்கீதம் மற்றும் பேச்சுப் போட்டிகளிலும் பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

சிறுவர் இலக்கியங்கள், சிறுவர் நாவல்கள் வாசித்தல் என்பவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள இவர்கவிதை எழுதுவதிலும் ஆர்வம் உள்ளவர். எதிர்காலத்தில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு ஓர் விஞ்ஞானியாக வேண்டும் என்பதை தனது இலட்சியமாக இவர் கொண்டுள்ளார்.

(பெற்றோர்களே! உங்கள் அன்புச் செல்வங்களான மாணவர்களும் இவனைப் போல் சாதனை படைக்க அவசியமான அனைத்து ஊக்குவிப்பையும் வழங்கி அவர்களை சாதனை படைக்கும் செயல்வீரர்களாக ஆக்குங்கள் என்று வேண்டும் அதேவேளை செல்வன் ரவீந்திரதாஸ் அபிலாசை வாழ்த்தி கௌரவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.)

# நாம் பொய்பேசுவதற்கு எமது பெற்றோரும் காரணம்!

பெற்றோர் ஆத்திரம் கொள்ளாதீர்கள். யதார்த்தம் என்னவென்று பார்ப்போம்.

கடைத்தெருவிற்கு எமது குழந்தையுடன் செல்லும் பொழுது அங்கு காணப்படும் அழகான பொம்மையைப் பார்த்து, அப்பொம்மையை வாங்கித்தரும்படி பிள்ளை அடம் பிடிக்கின்றது. அதனை வாங்கிக் கொடுக்கின்றோம். வீட்டில் பிள்ளை அதை வைத்து விளையாடும்பொழுது கைதவறி கண்ணாடியால் செய்யப்பட்ட அப்பொம்மை கவீரென்ற ஒலியுடன் உடைந்து சிதறுகின்றது. சத்தம் கேட்டு ஓடிவந்ததாய் பொம்மையை உடைத்ததற்காகப் பிள்ளையை நையப் புடைக்கின்றாள். பிள்ளைக்கோ வயது மூன்று; அது ஓவென்று கதறுகின்றது. பிள்ளையின் மனதில் தாய் பய உணர்வை வளர்க்கின்றாள்.

அதே குழந்தை மீண்டும் ஒரு பொம்மையை உடைத்த பொழுது காரணம் கேட்ட தாயிடம் குழந்தை பயத்தின் காரணமாக பொம்மையை பூனைதட்டி உடைத்து விட்டதாக பொய் கூறுகின்றது.

முதல் சந்தர்ப்பத்திலேயே குழந்தைக்கு கண்ணாடி பொம்மையை கவனமாக வைத்து விளையாட வேண்டுமென்று புத்திமதி கூறி பயம் காட்டாமலிருந்திருந்தால், இரண்டாவது சந்தர்ப்பத்தில் பிள்ளை சுயமாக பொய்யைச் சோடித்து கூறக் கற்றுக் கொள்ளாது என்பதை அனைத்துப் பெற்றோரும் மனதில் கொள்ள வேண்டும். பிள்ளைகள் மற்றவர்கள் போல பாசாங்கு செய்வதில் கெட்டிக்காரர்கள். பலகாரணங்களுக்காக வீட்டில் கணவனைத் தேடிவரும் கடன் காரனிடம் கணவன் வீட்டில் இருக்க, பிள்ளை உடன் இருக்க, கணவன் வீட்டில் இல்லை என்று பொய் கூறுவார்கள். தகப்பன் வீட்டில் இருப்பது பிள்ளைக்குத் தெரியும். தாய் பொய் கூறுவதைப் பார்த்து பிள்ளையும் பொய் கூறப் பழகிக் கொள்கின்றது.

பிள்ளைகளை நல்லவனாக்குவதும் கெட்டவனாக்குவதும் பெருமளவில் பெற்றோரின் கைகளிலேயே தங்கியுள்ளதென்பதை மறவாதீர்.

**பத்திரிகை விற்பனை முகவர்களுக்கு .................**

எமது அறிவுக்கதிர் சஞ்சிகை விற்பனைக்கு 10% விற்பனைக் கழிவு வழங்கவுள்ளோம். விருப்பமுள்ள முகவர்கள் எமது தலைவரின் முகவரிக்கு (பக்கம் 22ல்) தொடர்பு கொள்ளுங்கள். அத்துடன்

திரு. வீ. சகாதேவன் தொ.பே. இல 024-2220673, 0777-6075911

திரு. சீ. மதியழகன் தொ.பே. இல 026- 2222929

திரு. அ. அருனேஸ்வரன் தொ.பே. இல 074-614023/4

ஆகியவர்களுடனும் தொடர்பு கொள்ளலாம்.

அறிவுக்கதிர்

# வேற்றுமையில் ஒற்றுமை

மதம், மொழி என்றும் முதலாளித்துவம், பொதுவுடமை என்றும் பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளுக்கிடையில் யுத்தங்களும், நாடுகளுக் குள்ளேயே சிவில் யுத்தங்களும் நடந்துள்ளதை சரித்திரம் எடுத்தியம்புகின்றது.

இந்நிலையில் வேற்றுமையில் ஒற்றுமை என்று ஒரு தத்துவம் தற்பொழுது தீவிரமாக முன் வைக்கப் படுகின்றது.

இத்தத்துவத்தை இரு விடயங்களை உதாரணமாகக் கொண்டு விளக்கலாம்.

தாம்பூலம் சுவைக்கும் பழக்கம் நம்மவரிடமுண்டு. அதற்கு நாம் பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு, புகையிலை போன்ற வெவ்வேறு நிறம் கொண்ட பொருட்களைப் பயன் படுத்துகின்றோம். இப்பொருட்கள் அனைத்தும் தத்தமது தனித்துவத்தை இழந்து சிவப்பு நிறத்தை தோற்றுவிக்கின்றன. இவ்வுதாரணத்தில் வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவம் சிதைந்து விடுகின்றது.

மற்றுமோர் உதாரணத்தைப் பார்ப்போம் வெவ்வேறு வண்ண மலர்களைக் கொண்டு ஒரு பூமாலை தொடுக்கப்படுகின்றது.

அப்பொழுது ஒவ்வொரு வர்ணப்பூவும் தனது தனித்துவத்தை இழக்கவில்லை. மாறாக எல்லா வர்ணப்பூக்களும் ஒன்றிணைக்கப்பட்டு தனியான ஒரு அழகான மாலை உருவாக்கப்படுகின்றது. இவ்வுதாரணம் வேற்றுமையில் ஒற்றுமை எனும் தத்துவத்திற்கு பொருத்தமான ஒன்றாகும்.


இத் தத்துவத்திற்கு உதாரணமாக பல்லின மொழி, மதங்களைக் கொண்ட மக்கள் வாழும் சில நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறைமை மூலம் வேற்றுமையிலும் ஒற்றுமையுடன் வாழும் சீரிய ஆட்சி இவ்வுலகில் நடைபெறுகிறதென்பதை நாம் அனைவரும் மனதில் கொண்டு சமஷ்டி ஆட்சிமூலம் சுபீட்சமான வாழ்வை மேற்கொள்ள ஒவ்வொருவரும் உதவுவோமாக.

கருத்து மாலைத்
தொகுப்பு:
காங்கேயதிருமலைவன்னியான்

எமது அறிவுக்கதிர் பற்றிய ஒரு சிறு விவரணத்தை எமது சர்வதேச இணைப்பாளரும், அமைப்பாளருமான திரு. நா.எதிர்வீரசிங்கம் (tamil canadian. com) தமிழ் கனேடியன்.கொம் மூலம் சர்வதேச சமூகத்திற்கும் வழங்கி அறிமுகப்படுத்தியுள்ளார். இதனை பார்வையிட்ட ஆர்வலர்கள் தமக்காகவும் தமது பிள்ளைகளின் பயன்பாட்டிற்காகவும் எமது வருடாந்த சந்தா விபரத்தை திரு.எதிர்வீரசிங்கத்திடம் தொடர்பு கொண்டு விசாரித்துள்ளனர். இதனைத்தொடர்ந்து 2004-01-16ம் திகதி எமது நிர்வாக முக்கிய உறுப்பினர்கள் முன்னிலையில் எம்மை அவர் சந்தித்து ஆலோசனை கலந்த பொழுது சர்வதேச நாடுகளுக்கான வருடாந்த சந்தா விபரம் முடிவு செய்யப்பட்டுள்ளது. அம்முடிவை திரு.எதிர்வீரசிங்கம் தமிழ் கனேடியன் கொம் மூலம் சர்வதேச தமிழ் சமூகத்திற்கு அறிவித்துள்ளார்.

ஆசிரியர்.

## பின் அட்டை விளக்கம்



எமது கன்னி இதழ் அறிவுக்கதிர் சஞ்சிகையை இந்தியாவிலுள்ள சுற்றுலாவிற்கு பிரசித்தி பெற்ற ஊட்டியில் மிகவும் ஆர்வத்துடன் இரண்டு வாசக நெஞ்சங்கள் படிக்கின்றனர். இவ்விருவரும் குஜராத் மானிலத்து திரு. திருமதி. நாயுடு குடும்பத்தினரின் இரு புதல்விகள். இவர்கள் பிறப்பிடம் தென் ஆபிரிக்கா சிரேட்ட புதல்வி பெயர் பிரவிஸ்னி. தென் ஆபிரிக்க ''க்வா சூலு நெடல்'' பல்கலைக்கழக [SPEECH THERAPY (HONOURS) FINAL] பேச்சை குணப்படுத்தும் சிகிச்சை (சிறப்பு) இறுதியாண்டு மாணவி.

அடுத்தவள் பெயர் செருசா. இவள் மெற்றிகுலேசன் முடித்து வர்த்தக பட்டப்படிப்பு மேற்கொள்ள வுள்ளாள்.

இருவரும் பரதநாட்டிய அரங்கேற்றம், முறையே 1995லும் 2001லும் முடித்தவர்கள். இருவரும் பரதநாட்டிய வகுப்புக்கள் நடத்துகின் றனர். செல்வி பிரவிஷ்னி தனது ஐந்து

## சர்வதேச சமூகத்தின் கைகளில் அறிவுக்கதிர்

மாணவிகளுக்கு அரங்கேற்றமும் செய்துள்ளார். செல்வி செருசா 30 பயிலுனர்களுக்கு இலவசமாக பரதநாட்டியம் கற்பிப்பவர், 2002ல் வாய்ப்பாட்டில் அரங்கேற்றம் பெற்ற இவர் வாய்ப்பாட்டிலும் ஆர்மோனிய த்திலும் ஆசிரியையாகவும் கடமைபுரிகின்றார்.

செல்வி நெருசா இனிமையான குரலில் பக்திப் பாடல்களுட்பட தமிழ் பாட்டும் பாடுவார். இவர் தொடர்ந்தும் இந்தியாவில் பரத நாட்டியத்திலும் வாய்ப்பாட்டிலும் மேலும் சிறப்புத் தேர்ச்சி பெறவுள்ளார்.

பெற்றோருட்பட இவர்கள் நால்வரும் இந்துசமய இறைவழி பாட்டில் மிகவும் பற்றுறுதியுடன் ஈடுபடுபவர்கள்.

இவர்கள் கைகளிலும் அறிவுக்கதிர்; அவ்வாறே சர்வதேச நாடுகளிலுமுள்ள வாசக நெஞ்சங் களின் கைகளிலும் அறிவுக்கதிர் தாலாட்டப்பட்டு அதன் அழகையும், அகத்தின் கருத்தாழத்தையும் கண்ணுற்று தமிழர்கள் மகிழ்வடை கின்றனர் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம். (நீங்கள் உங்கள் புலம் பெயர்ந்து வாழும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவுக்கதிரை அனுப்பி அறிமுகப் படுத்துங்கள்.)

### இயற்கையின் அதிசயங்களில் ஒன்று!

**மனிதனின் உடலில் அறுபதாயிரம் மைல் நீளமுள்ள இரத்த நாளங்களுண்டு.**

**இதை கேட்டவுடன் காட் அட்டக் (Heart Attack) வந்து விடுமா?**

**உண்மை, நாம் அறியாதலால் பொய்யாகி விடாது அல்லவா?**

## அன்பார்ந்த வாசகர்களே!

வளரும் தமிழ்ச் சமுதாயம் இற்றைப்படுத்தபடவேண்டியது (update) ஒரு முக்கிய தேவையாகும். அதற்கு "அறிவுக்கதிர்" போன்ற ஒரு சஞ்சிகையின் துணை அவசியம் என்று கருதியே இச் சஞ்சிகையை வெளியிடத் துணிந்தோம்.

இதன் மூலம் சர்வ தேசத்திலும் பரந்து வாழும் தமிழினத்தை அறிவியல் ரீதியாக ஒன்றிணைத்து, பகிர்வதன் மூலம் எம்மினத்தை மேம்பாடடையச் செய்யவும் எண்ணியுள்ளோம்.

இந்நிலையில் இன்றைய நவீன தொழில் நுட்ப யுகத்தில் எமது "அறிவுக்கதிர்" சஞ்சிகை அதன் முழுமையான வளர்ச்சிக்கும் வாசகர்கள் மத்தியில் நிறைவான சேவையை வழங்குவதற்கும் தன்னை நவீனத் தகவல் பரிமாற்ற உபகரணங்களுடன் கூடிய அச்சுப்பதிப்புக் கருவிகளையும் கொண்டிருக்க வேண்டியதாக அமைத்துக் கொள்ள வேணடியது இன்றியமையாத தேவையாகும்.

கணினி தொழில் நுட்ப சாதனங்களைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய கட்டட அமைப்புடன் கூடிய ஒரு செயலகம் அமைக்க வேண்டியதும், அதற்கான காணிக் கொள்வனவு செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

எந்த தொண்டிற்கும் அறிவும், அனுபவமும், ஆற்றலுமுள்ள வேதனம் வழங்கிப்பேணப்படும் ஒரு ஆளணியும் நியமிக்கப்பட வேண்டியது அவசியமான அடிப்படையாகும்.

எனவே, எம் பணி வெற்றிகரமாகத் தொடர்வதற்கு உங்கள் வாரி வழங்கும் பண்பிற்கு எமது வேண்டுகோள் வழிசமைத்துத் தந்துள்ளது. முழு மனதுடனும் நம்பிக்கையுடனும் உங்கள் அன்பளிப்பை எமது கீழ் குறிக்கப்படும் வங்கிக் கணக்கிற்கு காசோலையாகவோ அல்லது காசுக்கட்டளையகவோ அனுப்பி உதவும் படி அன்புடன் வேண்டுகின்றோம்.

வங்கிக் கணக்கு விபரம்
"அறிவுக்கதிர்"
மக்கள் வங்கி,
முல்லைத்தீவு,
ஸ்ரீலங்கா,
சேமிப்புக்கணக்கு இல..25800.
*E-mail: arivukkathir@yahoo.co.uk*

முகவரி
த.குருகுலராசா,
தலைவர்,
"அறிவுக்கதிர்",
வலயக்கல்விப்பணிமனை,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு, இலங்கை,

(எமது முயற்சியின் ஆரம்பத்தலிருந்து இன்று வரை எமக்கு நிதியுதவி வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.)



"அன்பும், அறிவும், வீரமும் ஓங்குக!"

நன்றி
அன்புடன்
தங்கள் சேவையிலுள்ள,
ஆசிரியா்

# "அறிவுக்கதிர்" சஞ்சிகையின் கட்டமைப்புக் குழுக்கள்

## கிளிநொச்சி மாவட்டம்

போசகர்:
திரு.தி.இராசநாயகம் (அரச அதிபர்)

தலைவர்:
திரு.ப.அரியரத்தினம் (வ.க.ப)

உப தலைவர்:
திரு.பொன் நித்தியானந்தன் (பிரதேசச் செயலர்)

செயலாளர் / ஆசிரியர்:
அருட்திரு ச.எட்மன் றெஜினோல்ட்
இணைப்பாளர்
அன்னை இல்லம்

உப செயலாளர் / பொருளாளர்:
திரு.வி.வைரமுத்து (உ.க.ப)

நிர்வாகசபை உறுப்பினர்கள்:
டாக்டர்.ச.முருகானந்தன்
திரு.சி.பவானந்தன் (கிராம அலுவலர்)
டாக்டர்.ச.விக்கினேஸ்வரன் (மா.வை.அ)
திருமதி.ப.மார்க்கண்டு (பி.க.ப)
திரு.கி.சின்னராசா (பி.க.ப)
செல்வி.தேவகி.சிவதாசன் (அதிபர்)
திரு.ந.கமலக்கண்ணன் (மேலாளர், மக்கள் வங்கி)

## திருக்கோணமலை மாவட்டம்
(இடைக்கால நிர்வாகம்)

போசகர்:
திரு.கு.திலகரத்தினம் (வ.க.ப)

தலைவர்:
திரு.சீ.மதியழகன் (அதிபர்)

செயலாளர் ∴ ஆசிரியர்
திரு.ந.இரத்தினவடிவேல் (இ.போ.ச)

பொருளாளர்:
திரு.க.சின்னக்குட்டி

நிர்வாகசபை உறுப்பினர்கள்:
திரு.சி.தண்டாயுதபாணி (அதிபர்)
திரு.க.சித்திரவேல்
திரு.சித்தி அமரசிங்கம்
திரு.தா.பி.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு.சந்த்திரராம்.

சர்வதேச அமைப்பாளரும் இணைப்பாளரும்:
திரு.நா.எதிர்வீரசிங்கம், USA

யாழ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் துணைவேந்தரின் தலைமையில் ஒரு சிறிய தற்காலிக குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதன் சீராக்கம் உரிய வேளையில் நடைபெறும்.

இவ்வாறான மாவட்ட நிர்வாகக் குழுக்கள் உருவாக்கப்பட்டு காலக்கிரமத்தில் மத்திய ஆசிரியர் நிர்வாகக் குழு அமைக்கப்படும்.)

| விலை | |
|---|---|
| வருடாந்த சந்தா:- பிரித்தானியா £5, அமெரிக்கா $10, கனடா $10, ஏனைய நாடுகள் £5, இந்தியா ரூபா.120.00 | வான் தபால் கட்டணம் உட்பட |

அறிவுக்கதிர் சஞ்சிகையினால், திருக்கோணமலை ரெயின்போ மினிலாப் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# சர்வதேச மானிட சமூகத்தின் கைகளில் அறிவுக்கதிர்



படப்பிடிப்பு: காங்கேயதிருமலைவன்னியான்

விலை: ரூபா.30.00